# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - JUNE 2025
VOL. 23 ISSUE 3 - 28 PAGES - Rs. 21/-

ஜூன் 2025

## உள்ளே...

காக்கிநாடாவில் அற்புதங்கள்

இயேசுவின் பாரம்
- *Dr.* பால் தினகரன்

உபவாசத்தின் மூலம் விடுதலை

வழியில்லாத இடத்தை கர்த்தர் திறக்கும்போது



நான் உங்களுக்கு **இளைப்பாறுதல்** *தருவேன்.*
(மத்தேயு 11:28)

# காக்கிநாடா சமாதான பிரார்த்தனை திருவிழா



2025, மே 9 முதல் 11 வரை, ஆந்திர பிரதேசம் காக்கிநாடாவிலுள்ள நக்ளாரன் உயர்நிலை பள்ளி மைதானத்தில் நடைபெற்ற, காக்கிநாடா சமாதான பிரார்த்தனை திருவிழா மற்றும் பங்காளர் கூட்டம் தேவனுடைய மகத்துவமான அசைவாடுதலைக் கண்டது. அந்தப் பகுதி முழுவதிலுமிருந்து கிட்டத்தட்ட 30,000 ஜனங்கள் திரளாய் கூடி வந்தனர். மூன்று நாட்கள் நடைபெற்ற சமாதான பிரார்த்தனை திருவிழாவில் ஒவ்வொரு நாள் மாலையிலும் வல்லமையான கிரியைகள் வெளிப்பட்டன.

நாள்-1: Dr. பால் தினகரன் அவர்கள் ஏசாயா 41:13 என்ற வேதாகம பகுதியிலிருந்து, ''கர்த்தர் தம்முடைய பிள்ளைகளைத் தாங்குகிறார்'' என்ற கர்த்தரின் வாக்குத்தத்தத்தை தேவ செய்தியில் பகிர்ந்துகொண்டார். காருண்யா பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய ஆராதனை, பரலோகத்தைப்போல இருந்தது.

நாள்-2: சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன் அவர்கள், ஏசாயா 30:18 என்ற வசனத்திலிருந்து, கர்த்தரின் மனதுருக்கத்திலுள்ள குணாதிசயத்தை முக்கியப்படுத்தி தேவ செய்தியை அளித்தார். அநேகர் சுகம் பெற்றனர்; அநேகர் ஆவியினாலே ஞானஸ்நானம் பெற்றனர். அந்த இடம் முழுவதையும் பரிசுத்த ஆவியானவரின் சந்தோஷம் நிரப்புவதை ஆழமாக உணர முடிந்தது.

நாள்-3: Dr. பால் தினகரன், யோவான் 14:27 என்ற வேதாகம பகுதியிலிருந்து, துக்கத்தின்மீதும் பாவத்தின் மீதும் சமாதானத்தைக் கூறும் வார்த்தையை விவரித்தார். சகோதரி இவாஞ்சலின் அவர்கள், பரிசுத்த ஆவியின் நிறைவைப் பெறுவதற்காக வல்லமையான ஜெபத்தை ஏறெடுத்தார். சுகம் பெற்றோர், அற்புதங்களைப் பெற்றோரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.

சகோதரி பத்மா அவர்கள், மிகப்பெரிய சாட்சியை பகிர்ந்துகொண்டார்கள். பக்திக்குரிய விசுவாசியாகிய அவர்கள். தன்னுடைய இரண்டு மகன்களைக் குறித்த பாரத்துடன் இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். ஒரு மகனுக்கு வேலையுமில்லை, திருமணமும் ஆகவில்லை. மற்றொரு மகனுக்கு திருமணமாகியும் குழந்தை பாக்கியம் இல்லை. ஆனால், இந்தக் கூட்டத்தில் Dr. பால் தினகரன் அவர்கள் தீர்க்கதரிசனமாக அவர்களுடைய பெயரை அழைத்து, அவர்களது சூழ்நிலைகளை நேரடியாக கூறினார்கள். அப்பொழுது தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சமாதானமும் ஆறுதலும் அவர்கள் உள்ளத்தை நிரப்பியதை உணர்ந்து, குடும்பத்தைக் குறித்தான நம்பிக்கையுடனும் புதுப்பிக்கப்பட்ட விசுவாசத்துடனும் அந்த கூட்டத்திலிருந்து கடந்துசென்றார்கள்.

**காக்கிநாடா போதகர்கள் கூட்டம்:** மே 10, 2025 அன்று நடத்தப்பட்ட விசேஷித்த போதகர்கள் கூட்டத்தில் ஆயிரக்கணக்கான போதகர்களும், கிறிஸ்தவ தலைவர்களும் கலந்துகொண்டனர். நிலவிக்கொண்டிருக்கும்



காக்கிநாடா பங்காளர் கூட்டம்











பதற்றமான சூழ்நிலையில், இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சமாதானம் உண்டாகும்படி மன்றாட வேண்டுமென்ற பாரத்தை Dr.பால் தினகரன் இருதயத்தில் ஏற்பட்டது. ஒரே ஆவியில் ஒருமனப்பட்டு, போதகர்கள் ஆண்டவரை விசுவாசித்து, புயலை அமைதிப்படுத்தும்படி சமாதானப் பிரபுவை நோக்கிக் கூக்குரலிட்டார்கள். அற்புதவிதமாக நடந்த ஒரு திருப்பம், இரண்டே மணி நேரத்தில், சரியாக பிற்பகல் 3:35 மணிக்கு இந்தியா அதிகாரப்பூர்வமாக போர் நிறுத்தத்தை அறிவித்தது. இது, பலருக்கு நம்பிக்கையையும், நிம்மதியையும் கொண்டு வந்தது. இந்த ஜெபத்திற்கு சரியான நேரத்தில் வந்த பதில் தேவனுடைய உண்மையையும், தம்முடைய ஊழியக்காரர்களுக்கு அவர் கொடுக்கும் தீர்க்கதரிசன அதிகாரத்தையும் வெளிப்படுத்தும் சாட்சியாக இருக்கிறது.

பிரார்த்தனை திருவிழா நடைபெற்ற அந்த நாட்களில், ஒருநாள், அதாவது மே 11, 2025 அன்று ஊழியத்தின் உண்மையான பங்காளர்கள் மிகுந்த எதிர்பார்ப்போடும் விசுவாசத்தோடும் கூடி வரத்தக்கதாக இயேசு அழைக்கிறார் பங்காளர் கூட்டம் காக்கிநாடாவில் நடைபெற்றது. Dr.பால் தினகரன் அவர்கள் வல்லமையோடும், மனதுருக்கத்தோடும் கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்து ஆவியிலே நிரம்பி மன்றாட்டு ஜெபத்தை ஏறெடுக்கவும், தீர்க்கதரிசனம் உரைக்கவும் செய்தார். தேவனுடைய ஆசீர்வாதங்கள் பங்காளர்கள்மீது ஊற்றப்படும்படியாக, Dr. பால் தினகரன் மற்றும் சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன் இருவரும் இணைந்து, ஒவ்வொருவர் மீதும் தங்களுடைய கரங்களை வைத்து ஜெபித்தனர்.

போதகர்கள் மத்தியில் ஒற்றுமை, ஊழியப் பங்காளர்கள் பெலப்படுத்துதல் மற்றும் தீர்க்கதரிசன மன்றாட்டு ஜெபத்தின் மூலம் ஜனங்கள் பெற்ற சமாதானத்தின் அறிக்கைகள் யாவுமே அந்தப் பகுதியில் ஒரு வல்லமையுள்ள ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாவதற்கு வழிவகுத்தது.

## காக்கிநாடா போதகர்கள் கூட்டம்







# இயேசுவின் பாரத்தை சுமந்துகொள்ளுங்கள்

"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்." (மத்தேயு 11:28)

எனக்கு அருமையானவர்களே, நீங்கள் இயேசுவிடம் வரும்பொழுது, ஆண்டவர் உங்கள் பாரங்கள் எல்லாவற்றையும் நீக்கி, இளைப்பாறுதலை தருவார். இந்த வருடம் ஊழியக்காரர்களுக்கு இளைப்பாறுதலின் ஆண்டாக இருக்கும் என்று ஆண்டவர் எனக்குள் உணர்த்தினார். அவர்கள் போராடின எல்லா போராட்டங்களும், சந்தித்த எல்லா தடைகளும் ஆண்டவரால் நீக்கப்பட்டு இளைப்பாறுதலை பெற்றுக்கொள்வார்கள். இது, தேவனுடைய சித்தத்தை செய்வதற்கான இளைப்பாறுதல். மேற்கண்ட இந்த வாக்குத்தத்தம், தேவனுடைய ஊழியக்காரர்களுக்கும் அவருடைய பிள்ளைகளுக்குமே கொடுக்கப்பட்டிருக்கிறது. மத்தேயு 11:29,30 ஆகிய வசனங்களில், "என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொள்ளுங்கள். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது" என்று ஆண்டவர் கூறுகிறார். நீங்கள் இயேசுவின் பாரத்தை சுமக்கும்போது உங்கள் வாழ்க்கை இலகுவாகவும் எளிதாகவும் மாறும். நீங்கள் இளைப்பாறுதலைக் காண்பீர்கள்.

அநேக முறை நாம் நமது சொந்த பாரங்களை தினமும் சுமந்துகொண்டு, "ஆண்டவரே, என் பிள்ளைகள், என் கணவர்/மனைவி, என் வேலை, என் ஊழியம், எனக்கு அன்பானவர்கள், என் இலக்கு, என் தேர்வுகள் ஆகியவற்றை நீர் பார்த்துக்கொள்ளும்" என்று ஜெபிக்கிறோம். நாம், நமது கவலைகளை இயேசுவிடம் கொண்டு வந்தாலும், அவற்றை நாமே தொடர்ந்து சுமக்கிறோம். ஆனால், "என் பிள்ளையே, என் பாரத்தை சுமந்துகொள்" என்று ஆண்டவர் கூறுகிறார். நீங்கள் அவ்வாறு செய்யும் போது உங்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.

கர்த்தருடைய பாரத்துடன் ஒப்பிடும்போது நம்முடைய பாரம் சிறியதாக தோன்றும். "நான் எப்படி கர்த்தரின் பாரத்தை சுமக்க முடியும்" என்று நாம் யோசிக்கக்கூடும். ஆனால், கர்த்தர் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையைத் தருகிறார். நாம் நம்மை தாழ்த்தி, அவருக்கு பிரியமானதை செய்ய நம்மை ஒப்புக்கொடுக்கும்போது, அவருடைய பாரத்தை நாம் சுமக்கிறோம்.

### இயேசுவின் பாரம் என்ன?

முதலாவதாக, பாவத்தின் சாபத்திலிருந்து மனுக்குலத்தை மீட்க வேண்டும்.



**Dr. பால் தினகரன்** - *paul@jesuscalls.org*



*Pauldhinakaranofficial*

**“எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.”** (1 தீமோ. 2:4)

என்று வேதம் கூறுகிறது. ஆம், அதுவே ஆண்டவரின் பாரம். உலகத்தில் இருக்கிற அனைவரும் பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட வேண்டும். இயேசு கொடுக்கும் பாவ மன்னிப்பை அனைவரும் அனுபவிக்க வேண்டும். அனைவரும் இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டு, எல்லா பாவங்களிலிருந்தும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதே இயேசுவின் பாரம்.

ஆனால், உலகம் அவரை மறுதலிக்கும்போது, அவரை அசட்டை செய்யும்போது, அது அவருக்கு பாரமாக மாறுகிறது. அங்கு தான் கர்த்தர் உங்களையும் என்னையும் பார்த்து, “என்னுடைய பாரத்தை சுமந்துகொள்ளுங்கள்” என்று கூறுகிறார். அந்த பாரம் என்ன இயேசு சிலுவையில் தம்முடைய தியாகத்தின் மூலம் வழங்கிய இரட்சிப்பை பூமியில் உள்ள ஒவ்வொருவருக்கும் கொண்டு வருவதேயாகும். இதைத்தான் நாம் சுமக்க வேண்டும் என்று ஆண்டவர் எதிர்பார்க்கிறார்.

**“பகற்காலமிருக்குமட்டும் நான் என்னை அனுப்பினவருடைய கிரியைகளை செய்யவேண்டும்; ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகிறது.”** (யோவான் 9:4,5)

> நாம் நம்மை தாழ்த்தி, அவருக்கு பிரியமானதை செய்ய நம்மை ஒப்புக்கொடுக்கும்போது, அவருடைய பாரத்தை நாம் சுமக்கிறோம்

பகல் நேரம் இருக்கும்போதே நாம் வேலை செய்ய வேண்டும், ஏனென்றால், இரவு வருகிறது. அப்போது யாராலும் வேலை செய்ய முடியாது. நெருங்கி வரும் அந்த இரவின் அறிகுறிகளை நாம் ஏற்கனவே பார்க்கிறோம். அது அதிகரித்து வரும் ஆவிக்குரிய இருளின் வேளையாகும்.

**“இதோ, இருள் பூமியையும், காரிருள் வானங்களையும் மூடும்; ஆனாலும் உன்மேல் கர்த்தர் உதிப்பார்; அவருடைய மகிமை உன்மேல் காணப்படும்.”** (ஏசாயா 60:2)

ஆம், இருள் பரவிக் கொண்டிருந்தாலும் கர்த்தரின் மகிமை அவருடைய ஜனங்கள்மேல் உதிக்கும். உலகத்தின் ஒளியாகிய இயேசுவை மற்றவர்களுடைய இருதயத்திற்குள் சுமந்துசெல்ல, நாம் எழும்பி பிரகாசிக்க வேண்டிய தருணம் இதுவே. இயேசு ஒரு முறை, “நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்” என்று கூறினார். ஆனால், இப்போது அவர் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். எனவே “என் பிள்ளையே, என்னை சுமந்துகொள். என்னுடைய வெளிச்சத்தை உலகத்திற்குள் எடுத்துச் செல்” என்று சொல்லுகிறார். ஏனெனில், இயேசுவை பிரசித்தம்பண்ண முடியாத ஒரு காலம் வரும். காரணம், பிசாசின் இருளினால் பரவும் அக்கிரமமும் அநீதியும் பூமியை மூடும். எனவே, பகல் காலம் இருக்கும்போதே இயேசுவை ஜனங்களிடம் சுமந்து செல்வோம்.

*கந்தமால் என்ற இடத்தைச்சேர்ந்த ஒரு சகோதரர் உத்தம் குமார் நாயக் அவர்களின் வல்லமையான சாட்சி என் நினைவுக்கு வருகிறது. 1990-ம் ஆண்டு அவரது குடும்பம் பில்லிசூனியத்தினால் பாதிக்கப்பட்டு, வெகுவாக வேதனையுற்றது. அதனால், குடும்பத்தில் மூன்று பேர் மரித்தனர். உத்தம் அவர்களும் அதிகமாய் நோய்வாய்ப்பட்டு தீவிர சிகிச்சைக்காக புவனேஸ்வருக்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு தேவ ஊழியர் ஒருவரை அவர் சந்திக்க நேர்ந்தது. அந்த ஊழியரின் ஜெபத்தினால் அவர் அற்புதவிதமாக சுகம் பெற்றார். இந்த சந்திப்பு, அவர் தன் வாழ்வை இயேசுவுக்கு அர்ப்பணிக்கும்படி வழிநடத்தியது. சுகம் பெற்று தன்னுடைய கிராமத்துக்கு திரும்பினார். ஒரு தொழிலை ஆரம்பித்தார்; திருமணம் செய்தார்; 1அவருக்கு நான்கு பிள்ளைகள் பிறந்தன. அப்போது அவருக்கு இயேசு அழைக்கிறார் பத்திரிகை கிடைத்தது. அதில் காணப்பட்ட செய்திகளையும் சாட்சிகளையும் அவர் படித்து, கர்த்தரை சேவிக்க வேண்டும் என்ற ஆழமான அழைப்பை உணர்ந்தார். தன் வாழ்க்கைக்கான சித்தத்தை தேடி, Dr. டி.ஜி.எஸ். தினகரன் அவர்களுக்கு கடிதம் எழுதினார். ஒரு வாரம் சென்ற பின்பு, “ஜெபியுங்கள், கர்த்தருக்கு காத்திருங்கள். ஊழியம் செய்ய உங்களுக்கு வாசல் திறக்கும்” என்ற பதில் கிடைத்தது. 1998-ல் முழு நேர ஊழியத்தை ஆரம்பித்தார். அவர் பண பிரச்சினைகளை எதிர்கொண்டபோதிலும், உண்மையோடு சேவை செய்தார். 2008-ல் மீண்டும் ஒரு சோகம் ஏற்பட்டது. அவர் தங்கியிருந்த கிராமத்தில் கலவரங்கள் வெடித்தது; அவரது வீடு அழிக்கப்பட்டது. உத்தம் தன் குடும்பத்தினருடன் புவனேஸ்வருக்கு சென்றார். அங்கே, தெருக்களில் வாழ வேண்டிய சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டது.*

*2009-ல், ராஞ்சியிலுள்ள ஒரு போதகர், அவர்களை ஏற்றுக்கொண்டார். அப்போது, ராஞ்சி பிரார்த்தனை திருவிழாவை குறித்து கேள்விப்பட்டு அதில் கலந்துகொண்டார். நான் அந்த கூட்டத்தில் ஊழியம் செய்து கொண்டிருக்கும்போது, திடீரென்று, “இங்கு ஒரு மனிதனை நான் பார்க்கிறேன். நீங்கள் எல்லாவற்றையும் இழந்த நிலையில் இங்கு வந்திருக்கிறீர்கள். ஆண்டவர் உங்களுக்கு ஒரு வீட்டை கொடுப்பார். மீண்டும் உங்கள் வாழ்க்கையைக் கட்டி எழுப்புவார்” என்று கூறினேன். இந்த வார்த்தை தனக்குரியது என்று உத்தம் அறிந்துகொண்டார். அதே நாளில் நான் என் கரங்களை அவர் மீது வைத்து ஜெபித்தேன்.*



நீங்கள் கொடுக்கும்போது, இந்த ஊழியத்தின் மூலமாக மற்றவர்களுக்கு கட்டவிழ்க்கப்பட்ட அனைத்து ஆசீர்வாதங்களும், ஆண்டவரால், உங்கள் கணக்கிலும் சேர்க்கப்படும்

*வெகு சீக்கிரத்தில் பெரிய அற்புதம் ஒன்று நடந்தது. அந்த போதகரின் தாய், ஆண்டவரால் ஏவப்பட்டு, பெரிய தொகை ஒன்றை உத்தம் கரங்களில் கொடுத்து, சொந்தமாக வீடு வாங்கும்படி கூறினார்கள். நன்றியுள்ள இருதயத்தோடு அதைப் பெற்றுக்கொண்டு அவர் திரும்பவும் தன்னுடைய கிராமத்துக்கு சென்று ஒரு வீட்டை வாங்கினார். அது, தீர்க்கதரிசன முன்னறிவிப்பின்படியே நடந்தது. அங்கு கடந்த 15 ஆண்டுகளாக அவர் குடியிருந்து, தொடர்ந்து ஆண்டவருடைய ஊழியத்தை செய்து வருகிறார். 2016-ல், புவனேஸ்வரில், 200 பேர் ஆராதிக்கக்கூடிய தேவாலயத்தை எழுப்பியுள்ளார். குடும்பமாக ஆண்டவருக்கு ஊழியம் செய்வதே அவருக்கு பேரானந்தமாக இருக்கிறது.*

ஆம், உங்களை ஆண்டவருக்கு அர்ப்பணிப்பீர்களா? ‘‘ஆண்டவரே, நான் உம்மை மற்றவர்களுக்கு சுமந்துசெல்வேன்’’ என்று சொல்லுவீர்களா? இயேசு அழைக்கிறார் ஊழியத்தோடு நீங்கள் நிற்பீர்களா? காருண்யாவுடன், சீஷாவுடன் அல்லது ஆண்டவர் உங்களுக்கு கொடுத்திருக்கும் ஊழியத்தோடு நின்று, இயேசு கிறிஸ்து மூலமாக மற்றவர்களுடைய பாவங்களை நீக்குவீர்களா? நீங்கள் அவ்வாறு செய்யும்போது ஆண்டவர் உங்கள்மீது பிரியமாய் இருப்பார். உங்களுக்கு இளைப்பாறுதலை தருவார்.

**இயேசு எப்படி பாரத்தை சுமந்தார்?**

லூக்கா 22:42-44, அந்த பயங்கரமான நிகழ்வை விவரிக்கிறது. கெத்செமனே தோட்டத்தில் இயேசுவைப் பிடித்து சிலுவைக்கு கொண்டுசெல்லும் முன், ‘‘பிதாவே, உமக்கு சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படிசெய்யும்; ஆயினும் என் சித்தத்தின்படியல்ல, உம் சித்தத்தின்படியே ஆகக்கடவது’’ என்று இயேசு ஜெபம்பண்ணினார். அப்பொழுது ஒரு தேவதூதன் அங்கு தோன்றி அவரை பலப்படுத்தினான். ஆனாலும், அவர் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடு ஜெபம் பண்ணினார். அவருடைய வேர்வை ரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையில் விழுந்தது.

*ஒருமுறை என் தந்தை இந்த காட்சியை தரிசனத்தில் பார்த்தார்கள். இயேசு மிகுந்த வியாகுலத்துடன் இருப்பதையும், அவர் அருகில் சாத்தான் நின்றுகொண்டு மங்கிய குரலில், அவரை சோதிக்கும்படியாக, ‘‘கட்டாயம் இயேசு திரும்பிவிடுவார். கர்த்தருடைய பாரத்தை சுமப்பதற்கு மறுத்துவிடுவார். மனுக்குலத்திற்கு இரட்சிப்பை கொண்டு வருவதை தெரிந்துகொள்ள மாட்டார்’’ என்றான். ஆனால் இயேசு வெற்றிச் சிறந்தார். மறுபக்கம், நம்முடைய பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிற பரிசுத்த ஆவியானவர் இயேசுவிடம் வந்தார். அவரிடம் வரப்போகும் காரியங்களை ஞாபகப்படுத்தினார் (யோவான் 16:13). பரிசுத்த ஆவியானவர் கீழ்ப்படிதலின் மூலமாக சம்பவிக்கும் காரியங்களை இயேசுவுக்கு காண்பித்தார். அதாவது, பிதாவின் சித்தத்திற்கு அர்ப்பணித்து, இரட்சிப்பின் பாரத்தை சுமக்கும்போது, கர்த்தர் அவரை மரணத்திலிருந்து உயிர்த்தெழும்ப செய்வார்; எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்கு கொடுப்பார் மற்றும் திரளானோர் இரட்சிக்கப்படுவார்கள் என்பதே. பரிசுத்த ஆவியானவர் அவரை ஆறுதல்படுத்தினார். கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்ற நாம் அழைக்கப்பட்டிருக்கும்போது அதையே நமக்கும் செய்கிறார்.*

ஆவியானவரால் பலப்படுத்தப்பட்டு இயேசு தம்மை அர்ப்பணித்து, ‘‘ஆயினும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது’’ என்று கூறினார். அந்த நேரத்தில் சாத்தான் முகங்குப்புற கீழே விழுந்து, அழுது, ‘‘நான் அதமானேன். என் காலம் முடிந்தது. இயேசு என்னை மேற்கொண்டு விட்டார், என்றான்.

அதன்பின்பு, இயேசு எழுந்து தைரியமாக சிலுவைக்கு சென்றார். அவருக்கு செய்யப்பட்ட அநீதிகளின் மத்தியிலும், அவர் ஒருபோதும் அசைக்கப்படவில்லை. அனைவரின் மன்னிப்புக்காக அவர் ஜெபித்தார். இறுதி பலியாக தம்மையே ஒப்புக்கொடுத்தார். அவருடைய தியாகமான இரத்தத்தின் மூலம் அனைத்து மனுக்குலத்திற்கும் இரட்சிப்பிற்கான பாதை திறக்கப்பட்டது. இப்போது எல்லா பாவங்களிலிருந்தும் அது நம்மை சுத்திகரிக்கிறது.

ஆம், இயேசு, கர்த்தரின் பாரத்தை சுமந்தனிமித்தம் கர்த்தர் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார். இயேசுவின் ஒளியை மற்றவர்களுக்கு கொண்டுவர நீங்கள் உங்களை அர்ப்பணிக்கும்போது கர்த்தர் உங்களையும் எழுப்புவார்.

**‘‘அவர்கள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தி**

**னாலும் பிசாசை ஜெயித்தார்கள்.''** (வெளி. 12:11).

நீங்கள் இயேசுவை உலக ரட்சகராக அறிவிக்கும் போது, கர்த்தர் உங்களுக்காக வாசலைத் திறப்பார் (வெளி 3:8). ஆம், உங்களுக்கு ஒரு திறந்த வாசல், பரலோகத்திற்கு ஒரு திறந்த வாசல், ஜனங்களின் இருதயத்திற்கு ஒரு திறந்த வாசல் மற்றும் இயேசு விடமிருந்து பாய்ந்து வரும் ஒவ்வொரு ஆசீர்வாதத் திற்கும் ஒரு திறந்த வாசல்.

## இயேசு ஜனங்களின் பாரத்தை சுமந்தார்

மத்தேயு 9:36-ல், இயேசு திரளான ஜனங்கள் தம்மை பின்தொடர்வதைக் கண்டு, அவர்கள் மேல் மனதுருகி ''மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போல இருக்கிறார்கள்'' என்று கூறி, ''என்னிடம் வாருங்கள்'' என்று அவர்களை அழைத்தார். அவர் தம்முடைய கரங்களை அவர்கள் மீது வைத்து சுகப்படுத்தினார். வியாதிகள் நீங்கியது; பிசாசுகள் ஓடியது; பாவங்கள் கழுவப்பட்டது; குடும்பங்கள் ஒன்றுசேர்ந்தது. இயேசு வினிமித்தம் அவர்கள் இருதயம் மகிழ்ச்சியினால் நிரம்பியது.

நீங்களும் அதே பாரத்தை, அதாவது இயேசுவின் பாரத்தை சுமக்க வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார். இயேசுவின் நாமத்தினால் ஜனங்களுக்கு அற்புதங்களை யும் சுகத்தையும் புதுப்பித்த லையும் கொண்டுவருவதற் காகவே மோசே பாரத்தை சுமந்தார். ஆனால், அவரால் தனியாக சுமக்க முடியவில்லை. எண்ணாகமம் 11:12 முதல் 15 வரை உள்ள வசனங்களில், இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத் துக்கு நடத்தி சென்ற மோசே, இப்படியாக தேவனை நோக்கி கதறுகிறார்,

> **''இவர்களுடைய பிதாக்களுக்கு நான் ஆணை யிட்டுக்கொடுத்த தேசத்துக்கு நீ இவர்களை முலையுண்கிற பாலகனை தகப்பன் சுமந்து கொண்டுபோவதுபோல, உன் மார்பிலே அணைத்துக்கொண்டுபோ என்று நீர் என்னோடே சொல்லும்படி இந்த ஜனங்களையெல்லாம் கர்ப் பந்தரித்தேனோ? இவர்களை பெற்றது நானோ? இந்த ஜனங்கள் எல்லாருக்கும் கொடுக்கிறதற்கு எனக்கு இறைச்சி எங்கேயிருந்து வரும்? எனக்கு இறைச்சிகொடு என்று என்னைப் பார்த்து அழுகி றார்களே. உம்முடைய கண்களிலே எனக்குக் கிருபை கிடைத்ததானால், இப்படி எனக்கு செய்யா மல், என் உபத்திரவத்தை நான் காணாதபடிக்கு இப்பொழுதே என்னை கொன்றுபோடும்''** என்று வேண்டிக்கொண்டான்.

**நீங்கள் இயேசுவை உலக ரட்சகராக அறிவிக்கும்போது, கர்த்தர் உங்களுக்காக எல்லா வாசல்களையும் திறப்பார்**

*சகோதரி அருள்மொழியும், அவர்களது கணவரும் கடினமான சூழ்நிலை வழியாக கடந்துசென்றனர். அவர்கள் கணவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையானார். குடும்பத்தின் சமாதானம் கெட்டு, பண பிரச்சனையின் வழியாக கடந்துசெல்ல நேர்ந்தது. ஆனால் அந்த சகோதரி, ஜெபத்தில் உறுதியாக இருந்தார்கள். அடிக்கடி திருச்சி ஜெப கோபுரத்திற்கு சென்று, ஜெப வீரர்களின் உற்சாகத்தையும் ஜெப உதவியையும் பெற்றார்கள். ஒரு நாள், வேறொரு சகோதரி, ''ஜெபத் தின் மூலமாக என் கணவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலையானார்'' என்று சொன்ன சாட்சி, அவர்கள் நம்பிக்கையை புதுப்பித்தது. அதை தன்னுடைய குடும்பத்திற்கு என சொந்தம் பாராட்டி ஜெபித்தார்கள்.*

*இந்நிலையில், அவர்களது கணவர் மஞ்சள் காமாலை நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டு, பகுத்தறிவு இல்லாமல் பேச ஆரம்பித்தார். அப்பொழுது மருத்துவர்கள் நம்பிக்கை இழந்து, இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது என்று கைவிட்டனர். விரக்தியுடன், சகோதரி அருள்மொழி அவர்கள் மீண்டும் ஜெப கோபுரத்திற்கு சென்றார். அங்குள்ள ஜெப வீரர்கள், ''ஆண்டவரே, நீர் அவருக்கு இரண்டாவது தருணம் கொடும்'' என்று கெஞ்சினர். கர்த்தர் வல்லமை யோடு பதில் தந்தார். அவரு டைய கணவரை மஞ்சள் காமாலை நோயிலிருந்து சுகப் படுத்தியதோடு, குடிப்பழக்கத் திலிருந்தும் விடுதலையைத் தந்தார். அவர் சுகம் பெற்ற பொழுது, புதிய மனிதனாக, கட்டுகளிலிருந்து விடு பட்டு சமாதானத்தினால் நிரப்பப்பட்டவராக காணப்பட்டார்.*

ஆண்டவர் என் தந்தையை ஊழியத்திற்கு அழைத்தபோது, அவருக்கு முன்பாக தோன்றி, ''என் மகனே லட்சக்கணக்கானோருக்கு ஆறுதலை கொண்டு வரவும், அவர்களை என் பக்கமாக திருப்ப வும் நான் உன்னை தெரிந்துகொண்டேன். இன்று முதல் நான் உனக்கு புதிய இருதயத்தை தருகிறேன். மற்றவர்களின் பாரங்களை நீ கேட்கும்போது அவைகளை உன்னுடையதைபோல உணருவாய். நீ அழ ஆரம்பிப்பாய். அப்படி நீ அழும்போது நான் உன் கண்ணீரைப் பார்த்து அவர்களது கண்ணீரைத் துடைப்பேன்'' என்று கூறினார்.

இதுதான், ஜனங்களுடைய பாரங்களை சுமக்கும் இருதயம். இந்த அழைப்பினிமித்தம், என் தகப்பனார் மிகுந்த பாடுகளுக்குட்பட்டார். இரண்டு பிள்ளைகள் என் தாயின் கருவிலேயே மரித்துபோயின. அதற்குப் பின் தான் நான் பிறந்தேன். அதைத்தொடர்ந்து என் சகோதரி ஏஞ்சல் பிறந்தாள். அவள் தனது 17-வது வயதில், கொடிய கார் விபத்தில் பரிதாபமாக மாண்டு போனாள். தாங்கோனா துயரம் எங்களை தொடர்ந்

தது. பண நெருக்கடி மற்றும் இயேசுவின் இருதயத்தை புரிந்துகொள்ளாத ஜனங்களிடம் இருந்து வந்த குற்றச்சாட்டுகள்.

### மற்றவர்களின் வேதனையை சுமக்கும் பாரங்களை யாரால் புரிந்துகொள்ள முடியும்?

கர்த்தரின் கட்டளைகளை நிறைவேற்றுவதால் உண்டாகும் பாரம், ஜனங்களின் துக்கத்தை சுமப்பதால் வரும் பாரம் மற்றும் சரீரத்தின் பாடுகளையும் சுமப்பதால் வரும் பாரம். என் தகப்பனார் இந்த பாரங்களை சுமந்தார். அவருடைய கண்கள் பழுதடைந்தது. அவருடைய நுரையீரல் பாதிக்கப்பட்டது. அவருடைய சிறுநீரகம் செயலிழந்தது. அவருடைய கால்கள் பலவீனப்பட்டது. தலை முதல் கால் வரை, அறுவை சிகிச்சையினிமித்தம் வெட்டு காயங்களும், தழும்புகளும் ஏற்பட்டது. "ஏன் ஆண்டவரே" என்று அவர் கதறும்பொழுது, ஆண்டவரும் மறுமொழியாக, "மற்றவர்கள் கடந்துசெல்லும் வேதனையை நீ அனுபவித்தால் தான் மற்றவர்களின் வேதனைகளை நீ உண்மையாய் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் உன்னிடம் தங்கள் பாரங்களை பகிர்ந்துகொள்ளும் போது, நீ அவர்களை குற்றப்படுத்தமாட்டாய். நீயே அப்படிப்பட்ட பாடுகள் வழியாக சென்றபடியால், நீ அவர்களுக்காக அழுவாய். அப்படியாக நீ கதறும் போது, உன் கண்ணீரைப் பார்த்து நான் அவர்கள் கண்ணீரைத் துடைப்பேன்.

ஆம், என் நண்பரே, மற்றவர்களின் பாரங்களை சுமப்பது கடினம். எண்ணாகமம் 11:16-25 -ல் மோசே கதறும்போது, கர்த்தர் அவரிடம் "மோசே நீ ஒருவனாய் அதை தாங்க கூடாது. இப்பொழுது நீ 600,000 புருஷர்கள் தவிர பெண்கள், பிள்ளைகளின் பாரங்களையும் சேர்த்து சுமந்துகொண்டிருக்கிறாய். உன் மேல் இருக்கிற ஆவியை எடுத்து எழுபது மூப்பர்கள் மேல் வைப்பேன். அவர்கள் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள். அவர்கள் மூலம் ஜனங்களை தேற்றுவேன், வழிநடத்துவேன், பராமரிப்பேன்" என்றார். கர்த்தர் அதை செய்தார். உங்களுக்கும் அவ்வாறே செய்வார்.

அப்போஸ்தலர் 2:17-ல் வேதாகமம் கூறுவது போல்:

> **"கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்லுவார்கள்."**

அன்பு நண்பரே, மற்றவர்களின் பாரங்களை சுமக்கவும், அவர்களுக்கு அற்புதங்களை கொடுக்கவும் ஆண்டவர் உங்களை தம்முடைய ஆவியினால் நிரப்ப விரும்புகிறார்.

### இன்று, இயேசு அழைக்கிறார் ஜெப வீரராக உங்களை இணைத்துக்கொள்வீர்களா?

நீங்கள் வீட்டில் இருந்துகொண்டே இயேசு அழைக்கிறார் ஜெபகோபுர தொலைபேசி அழைப்புகளை ஏற்று, வேதனையில் இருப்பவர்களுக்காகவும் ஆண்டவரின் ஒரு தொடுதலுக்காக ஏக்கத்துடன் இருப்பவர்களுக்காகவும் நீங்கள் ஜெபிக்கலாம். நாங்கள் உங்களுக்கு பயிற்சி தருவோம். கர்த்தருடைய கிருபை உங்கள் மீது இருக்கும். மோசேயோடு நின்ற தீர்க்கதரிசிகள்போல, இந்த பாரத்தை தாங்கி கொள்ளக்கூடிய ஜனங்கள் வேண்டும்.

### நீங்கள் இயேசுவுக்கு ஸ்தானாபதியாக மாற விருப்பமா?

ஆண்டவர் உங்களை பயன்படுத்த ஆயத்தமாக இருக்கிறார். கர்த்தரின் ராஜ்யத்திற்குள் ஜனங்களை வழிநடத்தவும், இயேசுவின் அன்பினால் அவர்களுடைய பாரங்களிலிருந்து அவர்கள் விடுபட உதவவும் நாம் ஒன்றுபட வேண்டிய நேரம் இது. நீங்கள் ஜெப வீரராகவோ அல்லது ஸ்தானாபதியாகவோ செயல்படலாம். இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை அழைக்கும் நபர்களுக்கு நீங்கள் உங்கள் வீட்டில் இருந்தே ஜெபிக்கலாம். இருதயம் உடைந்தவர்களுக்கு இயேசுவை சுமந்துசெல்ல, உங்கள் நகரத்திலுள்ள ஜனங்களை சந்தித்து, அவர்களுக்காக ஜெபிக்க உங்களை ஸ்தானாபதியாக அனுப்பி வைப்போம்.

இயேசுவின் பாரமாக, மற்றவர்களின் பாரங்களை நீங்கள் சுமக்கும்போது, ஆண்டவர் உங்கள் பாரங்களை நீக்குவார். யோபு தன் நண்பர்களுக்காக ஜெபித்தார். அப்பொழுது ஆண்டவர் அவரை மீட்டெடுத்து, அவருடைய சிறையிருப்பை மாற்றி, இழந்த எல்லாவற்றையும் இரண்டு மடங்கு திரும்ப கொடுத்தார். அந்த ஆசீர்வாதம் இன்றைக்கு உங்கள் மேல் வருவதாக.

**ஜெபம்:** அன்புள்ள பிதாவே, உம்முடைய மகன்/மகள் இருதயத்தை உம்முடைய வல்லமையுள்ள பரிசுத்த ஆவியினால் நிரப்பும்படி ஜெபிக்கிறேன். அவர்களுக்கு ஒரு புதிய இருதயத்தை தாரும். தங்களுடைய சொந்த பாரத்தை சுமப்பதற்கு மட்டுமல்ல, உம்முடைய பாரத்தையும் சுமப்பதற்காக, மற்றவர்களுக்கு இரட்சிப்பையும், சுகத்தையும், அற்புதத்தையும் கொண்டு வருவதற்காக, பரிசுத்த ஆவியானவர் இப்பொழுது அவர்கள் மீது இறங்குவீராக. அவர்களை உம்முடைய ஞானத்தினாலும் அறிவினாலும் வெளிப்பாடுகளினாலும் நிரப்புவீராக. இயேசுவின் வல்லமை அவர்கள் மூலம் பாய்ந்து செல்வதாக. தரிசனங்களை காண்பார்களாக. அவர்களுக்குள் தீர்க்கதரிசன அபிஷேகம் எழும்புவதாக. அவர்கள், பிசாசுகளை விரட்டி, சமாதானத்தைக் கொண்டு வருவார்களாக. ஆண்டவரே, அனைவருக்கும் இரட்சிப்பை கொண்டு வர அவர்களுக்கு கிருபை தாரும் அவர்களுடைய பாரங்களை விலக்கியருளும். அவர்களது தனிப்பட்ட வாழ்வில் அற்புதங்களை நடப்பியும். நீர் அதை செய்வதற்காக உமக்கு நன்றி. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன், ஆமென்.



# திருநெல்வேலியில் திருச்சபைகளையும் மக்களையும் தேவனோடு ஐக்கியப்படுத்துதல்



நெல்லை பிரார்த்தனை திருவிழா, 2025, மே 3 மற்றும் 4 ஆகிய நாட்களில் திருநெல்வேலியில் உள்ள பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் சுமார் 12,000 பேர் நேரில் பங்கு பெற்றனர். மேலும், நேரடி ஒளிபரப்பு மூலம் ஆன்லைனில் எண்ணற்றோர் கலந்துகொண்டனர்.

ஸ்டெல்லா ரமோலா மற்றும் டேனியல் டேவிட்சன் இருவரும் நடத்திய துதி ஆராதனை, ஆழ்ந்த பயபக்தியை வெளிப்படுத்தும் ஒரு ஆவிக்குரிய சூழலை உருவாக்கியது. Dr. பால் தினகரன், சங்கீதம் 51:12 என்ற வேத பகுதியிலிருந்து அளித்த தேவ செய்தியில், இரட்சணியத்தின் சந்தோஷத்தை திரும்பவும் பெறுவதைக் குறித்து தெளிவுப்படுத்தினார். அதைத் தொடர்ந்து ஜனங்களுக்காக மனதார ஜெபித்தார். சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், 2 இராஜா. 20:5-லிருந்து ஆவியால் நிறைந்த தேவ செய்தியை வழங்கி, பரிசுத்த ஆவியின் நிறைவுக்காக மன்றாடினார். இரண்டாவது நாளில், Dr. பால் தினகரன், உபாகமம் 33:27 என்ற வேத பகுதியிலிருந்து, கர்த்தரின் நித்திய ஆதரவை சிறப்பித்து தேவ செய்தியை வழங்கினார்.

- சகோதரி ஜாய்ஸ் மேரி, அசுத்த ஆவியிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள்; தேவ வல்லமையையும் அவர் அளித்த விடுதலையையும் உணர்ந்தார்கள்.
- மதுரையை சேர்ந்த சகோதரி ராஜலட்சுமி அசுத்த ஆவியிலிருந்தும் உடல் வலியிலிருந்தும் பூரண சுகம் பெற்றார்கள்
- Dr. பால் தினகரனால் பெயர் சொல்லி அழைக்கப்பட்ட சகோதரி ஜூலியட் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள்; வியாதியிலிருந்து சுகம் பெற்றார்கள்.
- சகோதரி ஞானசிகாமணி பரிசுத்த ஆவியை பெற்றார்கள்; தேவ வல்லமையை அனுபவித்தார்கள்.
- சகோதரி கோமதி, பரிசுத்த ஆவியின் நிறைவை பெற்றார்கள்
- கோவில்பட்டியை சேர்ந்த சகோதரி பகவதி, பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள்

இவை மட்டுமல்ல, தேவன் அநேக அற்புதங்களை பிரார்த்தனை திருவிழா மூலமாக செய்தார்.

## தென்காசி ஜெப கோபுரத்தின் திறப்பு விழா

மே 5, 2025 அன்று, தென்காசியில் புதிய இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம் திறக்கப்பட்டது. நம்பிக்கையையும் சுகத்தையும் தெய்வீக தொடுதலையும் தரும் இடமாக விளங்க இந்த ஜெப கோபுரம் ஜெபத்துடன் அர்ப்பணிக்கப்பட்டது. தென்காசியிலோ அல்லது அதை சுற்றியுள்ள பகுதியிலோ நீங்கள் இருப்பீர்களானால், இந்த ஜெப கோபுரத்திற்கு நேரில் வந்து, வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை அனுபவிக்க உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

## ஆலய ஆராதனைகள்

Dr. பால் தினகரன், மே 5, 2025 அன்று சாரோன் தேவாலயம், துதியின் கோட்டை மற்றும் கிறிஸ்துவின் சேனை ஆகிய திருச்சபைகளில் ஊழியம் செய்தார். இதில் பங்குபெற்ற ஒவ்வொருவரும் தனிப்பட்ட விதத்தில் தேவனுடைய தொடுதலை உணர்ந்தனர். சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், திருநெல்வேலியில் உள்ள பரலோக அக்கினி ஆலயத்திலும் (Fire of Heaven) தேவாலயத்தில் ஊழியம் செய்தார்கள்.

அதே நேரத்தில் சகோதரி ஸ்டெல்லா ரமோலாவும் டேனியல் டேவிட்சனும் தூத்துக்குடியில் உள்ள சமாதான தேவாலயத்திலும் (Peace Church) ஊழியம் செய்தனர். ஒவ்வொரு ஆராதனையிலும் கர்த்தரின் பிரசன்னம் வல்லமையாய் வெளிப்பட்டு, அவருடைய நாமம் அதிகமாய் உயர்த்தப்பட்டது.

SCAN QR CODE TO WATCH THE TIRUNELVELI PRAYER FESTIVAL VIDEOS
WATCH AND BE BLESSED
LIKE & SUBSCRIBE TO GET THE NOTIFICATIONS




"நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல்
இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால்
ஏற்றகாலத்தில் அறுப்போம்" கலாத்தியர் 6:9

# கோடிக்கணக்கானோருக்கு நிகழ்நேர நம்பிக்கை

ஆண்டவர், இயேசு அழைக்கிறார் ஊழியத்திற்கு தமது அன்பை, சுகத்தை, ஆறுதலை பெருங்கூட்ட மக்களுக்கு கொண்டு வரும் தெய்வீக கட்டளையைக் கொடுத்திருக்கிறார். இன்றைக்கு இந்த ஊழியம், இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம் (Emmanuel Digital Project - EDP) மூலம் புதிய அடியை எடுத்து வைத்து முன்னேறுகிறது. தேவனால் கொடுக்கப்பட்ட இத்திட்டம் டிஜிட்டல் முறையில் ஊழியம் பங்காளர்களுக்காக ஜெபித்து, தைரியப்படுத்தி, எந்த நேரமும், எங்கிருந்தும் போதிக்கிறது.

**இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம்**




## இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம் என்றால் என்ன?

டிஜிட்டல் ஊழியத்தில் தைரியமான முயற்சி இம்மானுவேல் டிஜிட்டல் திட்டமாகும். உலகம் முழுவதும் உள்ள இயேசு அழைக்கிறார் பங்காளர்களுக்காக மேம்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் தொடர்பு மேலாண்மைக்கான மென்பொருளை உருவாக்குதல், புதிதாக வடிவமைக்கப்பட்ட இணையதளம், ஒரு சிறந்த மொபைல் செயலி இவற்றின் மூலம் சிறப்பாக ஊழியம் செய்வதாகும். எளிமையான இலக்கு: மக்களுக்கு சிறப்பாக, வேகமாக, கிறிஸ்துவை மையமாக கொண்ட அக்கறையுடன் சேவை செய்தல்.

நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, இம்மானுவேல் டிஜிட்டல் திட்டமானது ஜெப விண்ணப்பத்தை சமர்ப்பிப்பது, சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது அல்லது தேவ ஊழியத்திற்குக் கொடுப்பது என்று ஊழியப் பங்காளர்களுக்கு உதவி வருகிறது.

## இந்தத் திட்டத்தின் மூலம் நீங்கள் எதைப் பெற்றுக்கொள்வீர்கள்?

**ஊழியம் வளரும்போது ஆழமான, வேகமான, செயல்திறம் வாய்ந்த தொடர்புகள் தேவையாயிருக்கிறது.**

- தீவிர உடல்நல பிரச்னைகள், தனிப்பட்ட பிரச்னைகள் சார்ந்த அவசர ஜெப விண்ணப்பங்களுக்கு அதே நேரத்தில் பதில்கள் கொடுப்பது
- பங்காளரின் ஆவிக்குரிய பயணத்திற்கு ஏற்ப தனிப்பட்ட செய்திகள், போதனைகள் மற்றும் ஜெபங்களை அனுப்புவது
- மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளோர், மனச்சோர்வடைந்தோர், தனிமைப்பட்டோர் போன்றவர்களுக்கு உடனே ஜெபம் மற்றும் போதக உதவி செய்வது
- சுகமளிக்கும் கூட்டங்கள், தம்பதியர் முகாம்கள், வணிக ஆசீர்வாத கூட்டங்கள், அபிஷேகக் கூட்டம் போன்றவற்றிற்கு எளிதாக பதிவு செய்வது
- பங்காளர்கள் தங்கள் தசமபாகங்கள் மற்றும் காணிக்கைகளை விரைவாகவும் பாதுகாப்பாகவும் செயலி (app) அல்லது இணையதளம் வழியாக அனுப்ப உதவுதல்
- இது தொழில்நுட்பத்திற்கும் மேலானது. இயேசு அழைக்கிறார் ஊழிய பங்காளர்களுக்கு சிறப்பாகவும் மனதுருக்கத்தோடும் ஊழியம் செய்ய உதவும்.

## இதுவரை என்ன செய்யப்பட்டுள்ளது?

தேவனுடைய கிருபையாலும், பங்காளர்களின் உண்மையான ஜெபத்தாலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியுள்ளோம்:

CRM **மென்பொருள் உருவாக்கம்:** சமூகமான பயன் பாட்டுக்கு ஒருங்கிணைப்பு சோதனை நடந்துகொண்டிருக்கிறது.

**இணையதளம் மறுஉருவாக்கம்:** புதிய முறையில் பயனர் தோழமை பக்கத்துடன் எல்லா வயதினருக்கும் ஏற்ற வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

**மொபைல் செயலி சோதனை:** மொபைல் செயலியுடன் மென்பொருளை இணைத்து தற்போது நேரடி சோதனை நடைபெறுகிறது.

**இந்த முயற்சிகள் ஊழியத்தில் வல்லமையான கருவியாக விளங்கும். ஆனால், இறுதி வடிவம் எட்டப்படும் முன்னர் இன்னும் பல காரியங்கள் செய்யப்படவேண்டும்.**

## இன்னும் செய்யப்பட வேண்டியவை:

**தேவன் கொடுத்துள்ள இந்தத் திட்டத்தை முழுமையாய் செயல்படுத்த இன்னும் பல காரியங்களை முடிக்க வேண்டும்.**

- கணினி ஒருங்கிணைப்பு பணிகள் முடிக்கப்பட்டு முழு செயல்பாடு கொண்ட CRM பயன்பாட்டுக்கு வரவேண்டும்.
- ஜெபம் மற்றும் போதனைகளுக்கான நிகழ்நேர அறிவிப்புகள் செய்யப்பட வேண்டும்.
- பயனர் தரவுகள் மற்றும் இணையவழி நன்கொடைகளுக்கு பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட வேண்டும்.
- நல்லமுறையில் டிஜிட்டல் தளங்களை பயன்படுத்த ஊழியர்களுக்கும் தன்னார்வலர்களுக்கும் பயிற்சியளிக்கவேண்டும்.
- இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ரூ.5 கோடி செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. உங்களைப் போன்ற உண்மையுள்ள விசுவாசிகள் மூலம் தேவன் இதற்கு தேவையானவற்றை அளிப்பார் என்று நம்புகிறோம்.

## இந்தத் திட்டத்தில் நீங்கள் விதைக்கும்போது என்ன நடக்கும்?

“சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்” (2 கொரிந்தியர் 9:6) என்று வேதம் நிச்சயமாய் கூறுகிறது. இந்தத் திட்டத்தை ஆதரிப்பதால் நீங்கள் நல்ல நிலத்தில் விதைக்கிறீர்கள்.

- தேவைகளோடு இருக்கும் ஆயிரக்கணக்கானோருக்கு குணமாக்குதலையும் நம்பிக்கையையும் அளிக்கிறீர்கள்
- டிஜிட்டல் முறையில் சுவிசேஷத்தை புதிய பகுதிகளுக்கு புதிய தலைமுறையினருக்கு அறிவிக்கிறீர்கள்
- உங்களால் தொடப்படும் ஆத்துமாக்களை பரலோகத்தில் ஆவிக்குரிய கணக்கில் சேர்க்கிறீர்கள்
- கீழ்ப்படிதலும் உதாரகுணமும் உள்ளவர்களை அவர் கனப்படுத்துகிறார்; தேவனுடைய பரிபூரண ஆசீர்வாதத்தை உங்கள் வாழ்க்கையில் பெற்றிடுங்கள்.



**இந்தத் திட்டத்தை பங்காளர் எப்படி தாங்கலாம்?**

**கீழ்க்காணும் முறையில் நீங்கள் இந்த தெய்வீக ஊழியப் பணிக்கு உதவலாம்**

☐ ரூ. 1,00,000/- ☐ ரூ. 50,000/- ☐ ரூ. 25,000/- ☐ ரூ........ (ஆண்டவரால் வழிநடத்தப்படுகிற தொகை)

பெரிய தொகையோ, சிறிய தொகையோ நீங்கள் கொடுக்கும் எல்லா காணிக்கையும் தேவையின் மத்தியில் வாழும் கோடிக்கணக்கான ஆத்துமாக்களுக்கு தேவ அன்பையும், ஆறுதலையும் கொண்டு செல்ல உதவும்.

**கீழ்க்காணும் ஏதேனும் ஒரு வழியில் காணிக்கை கொடுக்கலாம்**

இணையதளம்: www.jesuscalls.org நேரடியாக: உங்கள் பகுதியில் அமைந்துள்ள இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்கு சென்று கொடுக்கலாம். முகவரி: ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 28.
* பங்காளர் சேவை: தொலைபேசி எண் 044 - 23456677 (காலை 8 முதல் இரவு 8 மணி வரை)
காணிக்கைகளை எளிதாக அனுப்பக்கூடிய வழிகளை இந்த இதழின் 13-ம் பக்கத்தில் காணலாம். QR Codeஐ ஸ்கேன் செய்தும் நன்கொடை வழங்கலாம்.

**காணிக்கை அனுப்பும்போது 'இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம்' என்று குறிப்பிட மறவாதிருங்கள்**

---

**தேவன் அருளிய இந்தப் பணியில் எங்களுடன் இணைந்திடுங்கள்**

இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம் - ஒரு தொழில்நுட்பம் சார்ந்த திட்டம் மட்டுமல்ல, அது ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும், விசுவாசத்தை ஸ்திரப்படுத்தும், ராஜ்யத்தை விரிவாக்கும் தேவனுடைய அசைவாடுதலாகும். உங்கள் பங்களிப்புடன் இந்தியா மற்றும் அதை தாண்டி, எல்லா இல்லங்களுக்கும், எல்லா இருதயங்களுக்கும், புண்பட்ட ஆத்துமாக்களுக்கும் கிறிஸ்து அளிக்கும் ஆறுதலை கொண்டு செல்ல முடியும்.

**நாம் ஜெபத்தில், விசுவாசத்தில் இணைந்து இந்த தரிசனத்தை நிறைவேற்றுவோம்.**



அன்புள்ள நண்பரே,
ஆண்டவர் கூறுகிறார், "அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும்...அல்லவோ எனக்கு உகந்த உபவாசம். அப்பொழுது விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்க்கும்." (ஏசாயா 58:6-8)

# உபவாசத்தின் மூலம் விடுதலை

உபவாசம், ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் மிகவும் வல்லமையுள்ள ஆவிக்குரிய கட்டுப்பாடுகளில் ஒன்றாகும். ஜெபத்துடனும் விசுவாசத்துடனும் இணைந்தால், உபவாசம் அரண்களை நிர்மூலமாக்கவும், தெய்வீக தொடுதலை கட்டவிழ்க்கவும், விடுதலையை ஏற்படுத்தவும் ஆற்றல்மிக்கது. ஏசாயா 58-ம் அதிகாரம் நமக்கு ஞாபகப்படுத்துவதுபோல, உபவாசம் என்பது தனிப்பட்ட வாழ்வின் பக்தியை சார்ந்தது மட்டுமல்ல, அது, "கட்டுகளை அவிழ்ப்பதற்கும், நெருக்கப்படுகிறவர்களை விடுதலையாக்குவதற்கும்" ஓர் தெய்வீக ஆயுதமாக விளங்குகிறது.

2024-ம் ஆண்டு, ஆந்திரப் பிரதேசத்தை சேர்ந்த நீரஜா என்ற பெண்ணிற்கு கருப்பை நீக்கும் அறுவை சிகிச்சை நடந்தது. அறுவை சிகிச்சை முடிந்தவுடன், சிகிச்சையில் ஏற்பட்ட ஒரு சிக்கலின் காரணத்தால், அவர்களுடைய இருதயம் 15 நிமிடங்கள் செயல்படாமல் நின்றுபோனது. குடும்பத்தினர் மிகவும் மனமுடைந்து போனார்கள்; மருத்துவர்களும் நம்பிக்கையை இழந்தனர். இந்த செய்தி, இஸ்ரேல் தேசத்திலிருந்த நீரஜாவின் சகோதரி மேரிக்கு தெரிய வந்தது. திகைத்துப்போன அவர்கள், உடனே, இயேசு அழைக்கிறார் தொலைபேசி ஜெப கோபுரத்துடன் தொடர்புகொண்டு, உபவாச ஜெபத்தில் ஆண்டவரை நோக்கிப் பார்த்தார்கள். தொடர்ந்து, நீரஜாவின் வாழ்க்கைக்காக சகோதரி மேரி மூன்று நாட்கள் உபவாசத்துடன் கதறி ஜெபித்தார்கள். இந்த நேரத்தில், கர்த்தர் தமது வாக்குத்தத்தங்களால், குறிப்பாக, "அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களை குணமாக்கி அவர்களை அழிவுக்கு தப்புவிக்கிறார்" (சங்கீதம் 107:20) என்ற வார்த்தையின் மூலம் அவர்களை பலப்படுத்துவதை உணர்ந்தார்கள். மூன்றாவது நாள், நீரஜா பரிபூரண சுகம் பெற்றார்கள். அவர்களுக்கு சுயநினைவு வந்தபோது, "ஒரு மென்மையான பிரசன்னமும் தொடுதலும் ஏற்பட்டு, மீண்டும் அவர்களை உலகத்திற்குள் கொண்டுவந்தது" என்றார்கள். ஆனால் மேரி அவர்களோ, உபவாசம், நம்பிக்கை மற்றும் ஊக்கமான ஜெபத்திற்கு பதிலளிக்கும் விதமாக ஆண்டவர் இடைப்பட்டார் என்பதை அறிந்திருந்தார்கள்.



## வேதாகமம் கூறும் உபவாசம்: தைரியமாக நின்ற எஸ்தர்

வேதாகமம், உபவாசம் எவ்வாறு விடுதலைக்கு வழி வகுத்தது என்பதற்கான சம்பவங்களால் நிரம்பியுள்ளது. மிகவும் வலிமையான உதாரணங்களில் ஒன்று, எஸ்தர் ராஜாத்தியைக் குறித்தது. யூத மக்கள் அழிவை எதிர்கொண்டபோது, எஸ்தர், மூன்று நாள் உபவாசத்திற்கு அழைப்பு விடுத்தாள்: "நீர் போய், சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச்செய்து, மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம்பண்ணுங்கள்" (எஸ்தர் 4:16). யுத்தம், அரசியலை சார்ந்தது மட்டுமல்ல, அது ஆவிக்குரிய யுத்தம் என்றும் அவள் அறிந்துகொண்டாள். ஜனங்கள் உபவாசத்தோடு தேவனுடைய இரக்கத்தை தேடினபடியால், ராஜாவின் இருதயம் எஸ்தர் பக்கம் திரும்பியது; யூதர்களுக்கு எதிராக எழும்பிய சதி முறியடிக்கப்பட்டது. அவர்களுக்கு வந்த விடுதலை, பலத்தினாலோ திறமையினாலோ அல்ல, மாறாக, உபவாசத்தினாலும் ஜெபத்தினாலும் வந்தது.

## மன்றாடுதல், உபவாசத்தில் ஏன் முக்கியமானது?

உபவாசம், நம்மை தாழ்த்துகிறது (சங்கீதம் 35:13). நம் இருதயத்தை ஆண்டவரின் சித்தத்துடன் இணைக்

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

> **உபவாசம் என்பது அன்பின் கிரியையாகவும் ஆவிக்குரிய யுத்தமாகவும் இருக்கிறது**

கிறது. நம்முடைய ஆவிக்குரிய பகுத்தறிவை கூர்மையாக்கி, வல்லமையுடன் ஜெபிப்பதை அதிகரிக்கிறது. பிசாசினால் ஒடுக்கப்பட்ட ஒரு இளைஞனை குறித்து, "இந்த ஜாதிப்பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப்போகாது" (மத்தேயு 17:21) என்று இயேசு தாமே கூறியுள்ளார். அவருடைய சீஷர்கள் அதை துரத்திவிட கூடாமல் போனபோது, சாதாரண ஜெபத்தைக் காட்டிலும் ஜெபத்தில் ஒரு திருப்பம் அதிக அவசியம் என்று இயேசு வெளிப்படுத்தினார். நம் அன்பானவர்களுக்காக நாம் உபவாசிக்கும்போது, நாம் அவர்களுக்காக திறப்பிலே நிற்கிறோம். ஒரு திமிர்வாதக்காரனை இயேசுவிடம் கொண்டுவர கூரையை கிழித்த நண்பர்களைப்போல (மாற்கு 2:4), நம்முடைய உபவாசம் அன்பின் கிரியையாகவும் ஆவிக்குரிய யுத்தமாகவும் இருக்கிறது.

### அன்பானவர்களுக்காக உபவாசம் இருப்பதில் நடைமுறைகள்

1. **பாரத்துடன் ஜெபிக்க ஆரம்பியுங்கள்:** யாருக்காக உபவாசிக்க வேண்டும் என்பதையும், அவர்களுக்கு என்ன மாற்றம் அவசியம் என்பதையும் வெளிப்படுத்துமாறு ஆண்டவரிடம் கேளுங்கள்.
2. **உங்கள் உபவாசத்தை தேர்ந்தெடுங்கள்:** அது முழு உபவாசமாக இருந்தாலும் சரி, பகுதி உபவாசமாக இருந்தாலும் சரி (தானியேல் உபவாசித்ததுபோல), அல்லது ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவை தவிர்ப்பதாக இருந்தாலும் சரி, உங்கள் சரீரத்தையும் நேரத்தையும் ஆண்டவரிடம் அர்ப்பணியுங்கள்.
3. **வேதத்தில் மூழ்கிவிடுங்கள்:** உங்களுடைய ஆவியை ஆண்டவருடைய வார்த்தையால் ஊட்டுங்கள். ஏசாயா 49:25 போன்ற வாக்குத்தத்தங்களை அறிக்கை செய்யுங்கள். "உன்னோடு வழக்காடுகிற வர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக்கொள்ளுவேன்."
4. **தொடர்ந்து ஜெபியுங்கள்:** ஜெபம் இல்லாமல் உபவாசிப்பது, வெறும் பசியோடு இருப்பதாகும். உங்கள் அன்பானவரின் விடுதலை, பாதுகாப்பு அல்லது இரட்சிப்புக்காக குறிப்பாக அழுது ஜெபியுங்கள்.
5. **தெய்வீக உடன்பாட்டை எதிர்பாருங்கள்:** ஆண்டவர் கேட்கிறார் என்றும், அவருடைய நேர்த்தியான வழிகளிலும் நேரத்திலும் பதிலளிப்பார் என்றும் நம்புங்கள்.

சிறைப்பட்டவர்களை விடுவிக்கும் பணியில் ஆண்டவர் இன்றும் செயல்படுகிறார். உங்கள் உபவாசம் அடிமைத்தனங்களை உடைக்கவும், நோயை குணப்படுத்தவும், வழி தவறியவர்களை வீட்டிற்கு கொண்டு வரவும் அல்லது கடினமான இருதயத்தை மென்மையாக்கவும் தூண்டுகோலாக இருக்கலாம். "**நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது**" (யாக்கோபு 5:16) என்பதை அறிந்து, இயேசு உபவாசித்து ஜெயம் பெற்றதுபோல (மத்தேயு 4), நீங்களும் வெற்றியுடன் உபவாசிக்கலாம்.

உபவாசத்தின் மூலம் உங்கள் அன்பு வெளிப்படட்டும். நீரஜாவுக்காக மன்றாடி ஜெபித்த மேரியைப்போல, தன் ஜனங்களுக்காக நின்ற எஸ்தரைப்போல, உங்களுடைய ஆவிக்குரிய தியாக செயல், நீங்கள் மிகவும் நேசிப்பவர்களுக்கு விடுதலையைக் கொண்டுவர ஆண்டவர் பயன்படுத்தும் கருவியாக இருக்கலாம். இன்று அவர்களின் விடுதலைக்காக நீங்கள் உபவாசிப்பீர்களா?




**கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்**

**வங்கி மூலம் :**

IndusInd Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **555444333222111**
Bank: **IndusInd Bank, Rajaji Salai Branch, Chennai - 600001.** IFS Code: **INDB0000167**

ICICI Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **000901056144**
Bank: **ICICI Bank Ltd., Nungambakkam Branch, Chennai 600 034.**
IFS Code: **ICIC0000009**

BANK TRANSFER DETAILS CAN BE INTIMATED: partnercare@jesuscalls.org

QR Code-ஐ ஸ்கேன் செய்து அனைத்து UPI செயலிகள் மூலமும் தாங்கலாம்.

SCAN TO PAY

Paytm G Pay BHIM

UPI ID **jesuscalls@indus**

நீங்கள் வங்கி பரிமாற்றம் மற்றும் வங்கிகளின் செயலிகள் (Apps) மூலமாக நன்கொடை அனுப்பினால், தயவுசெய்து அதைக் குறித்த விவரங்களை உடனே 98409 99923 என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் அல்லது வாட்ஸ்அப் வாயிலாக எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கவும், உங்கள் நன்கொடை வந்து சேர்ந்ததற்கான ஒப்புதலை உங்களுக்கு தெரியப்படுத்தவும் அது உதவும்.

மணியார்டர் (EMO) மற்றும் 'JESUS CALLS' என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் / காசோலை (CTS) எடுத்து, ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 028 என்ற முகவரிக்கு அனுப்பலாம்.

உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரத்திற்கு நேரில் சென்றும் தாங்கலாம்

எனக்கு மிகவும் அன்பான ஊழிய பங்காளரே,

ஜூன் மாதத்திற்குள் நாம் அடியெடுத்து வைக்கும்போது, "நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று மத்தேயு 11:28-ல் இருந்து ஆண்டவர் தரும் வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொள்ளுங்கள். வருத்தங்களையும் பாரங்களையும் சுமப்பதன் மத்தியில், உண்மையான இளைப்பாறுதல் காணப்படும் அவருடைய பிரசன்னத்திற்குள் இயேசு உங்களை அழைக்கிறார். அவருடைய சமாதானம் உங்கள் இருதயத்தை அமைதிப்படுத்தட்டும், உங்கள் ஆவி உயிர்ப்பிக்கப்படட்டும் மற்றும் புதுபெலன் அடைவீர்களாக. இந்த மாதம், அவர் உங்கள் சுமையை சுமந்து, அவரது பூரண இளைப்பாறுதலால் உங்களை நிரப்புவார் என்பதை அறிந்து உறுதியான நம்பிக்கையுடன் நடவுங்கள்.



# உள்ளத்தின் ஆழத்திலிருந்து

## பேசுகிறேன்...

நீங்கள் ஆண்டவருக்கும் எங்களுக்கும் மிக அருமையானவர்கள். உங்கள் அன்பு, ஆதரவு மற்றும் பிரார்த்தனைகள் இந்த ஊழியத்தை முன்னே சுமந்து சென்றுள்ளது. உங்களைப் போன்ற உண்மையுள்ள, அர்ப்பணிப்புள்ள பங்காளர்களை எங்களுக்கு தந்து ஆசீர்வதித்ததற்காக நான் ஆண்டவருக்கு நன்றி கூறுகிறேன். ஊழியத்தில் ஆண்டவர் நடப்பித்த மற்றும் நடப்பிக்க போகிறதை குறித்த தொகுப்பை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பேரானந்தம் கொள்கிறேன்.

### துதி அறிக்கை

- தஞ்சாவூர், சி.எஸ்.ஐ. செயிண்ட் பீட்டர்ஸ் சர்ச்-ல் உள்ள சபை கூடத்தில், ஏப்ரல் 26, 2025 அன்று நடந்த பங்காளர் கூட்டத்தில் 800-க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். அங்கு நான் பிரசங்கித்து, ஆண்டவரின் சமாதானத்துக்காகவும் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபித்தேன். என் மனைவி, சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், ஜனங்களின் சுகத்துக்காகவும் மறுமலர்ச்சிக்காகவும் அபிஷேகிக்கப்பட்ட ஜெபத்தை நடத்தினார்கள். ஏப்ரல் 27, 2025 அன்று, God's House வளாகத்தில் நடந்த குடும்ப ஆசீர்வாத சிறப்பு ஆராதனையில் நாங்கள் ஊழியம் செய்தோம்.
- 2025, மே 3, 4, ஆகிய நாட்களில் திருநெல்வேலியில் உள்ள பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற, நெல்லை பிரார்த்தனை திருவிழாவில் சுமார் 12,000 பேர் நேரிலும், நேரடி ஒளிபரப்பு மூலம் ஆன்லைனில் எண்ணற்றோரும் கலந்துகொண்டனர். ஸ்டெல்லா ரமோலா, டேனியல் டேவிட்சன் இருவரும் நடத்திய துதி ஆராதனை, தெய்வீக சந்திப்புக்கு இருதயங்களை ஆயத்தப்படுத்தியது. இரட்சணியத்தின் சந்தோஷத்தை திரும்பவும் பெறுவதை குறித்தும், நம்மை தாங்கும் கர்த்தரின் நித்திய புயங்கள் குறித்தும் நான் தேவ வார்த்தையை பகிர்ந்து கொண்டேன். சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், ஆவியில் நிறைந்த செய்தியை வழங்கி, பரிசுத்த ஆவியின் நிறைவுக்காக மன்றாடினார்.
- ஆந்திரப் பிரதேசத்தின் காக்கிநாடாவில் உள்ள மெக்லாரின் உயர்நிலைப் பள்ளி மைதானத்தில், மே 9 - 11 வரை நடைபெற்ற காக்கிநாடா சமாதான பிரார்த்தனை திருவிழாவில், சுமார் 30,000 பேர் கலந்துகொண்டு, கர்த்தரின் வல்லமையையும் சமாதானத்தையும் அனுபவித்தனர். இந்த மூன்று நாள் கூட்டங்களில், நானும் என் மனைவியும் ஏறெடுத்த தீர்க்கதரிசன ஜெபங்கள் மற்றும் சுகம் பெற்றோரின் சாட்சிகளால், இருதயங்கள் மாற்றப்பட்டு வாழ்க்கைகள் புதுப்பிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

### ஜெப தேவைகள்

**ஒரு புதிய கல்வியாண்டு தொடங்குகிறது**

உங்கள் பிள்ளைகள் இந்தப் புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைக்கும்போது, அவர்களின் வெற்றி மற்றும் நல்வாழ்வுக்காக நாங்கள் தொடர்ந்து ஜெபிப்போம். அவர்கள் பரிட்சையில் வெற்றி பெற்றதைக் குறித்த சாட்சியையும், ஊழியத்தால் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்களின் விளைவாக பதிலளிக்கப்பட்ட ஜெபத்தை பெற்றிருந்தாலும், தயவுசெய்து அதை testimony@jesuscalls.org அல்லது 9791934442 என்ற வாட்ஸ்அப் மூலமாகவோ எங்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

நம் இளம் பங்காளர்களுக்காக, குறிப்பாக இந்த முக்கியமான நேரத்தில், கர்த்தர் அவர்களை சிறந்த பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு நடத்தி, அவருடைய மகிமைக்காக படிப்பில் அவர்கள் பிரகாசிக்கும்படி உதவ நாங்கள் தினமும் ஜெபிக்கிறோம்.

உங்கள் பிள்ளை இன்னும் இளம் பங்காளர் திட்டத்தின் ஒரு பங்காக இல்லாவிட்டால், இன்றே அவர்களை பதிவு செய்ய உங்களை அன்புடன் அழைக்கிறோம். இந்த பிரார்த்தனை முயற்சி, பிள்ளைகளின் கல்விப் பயணம் முழுவதிலும், கர்த்தரின் பாதுகாப்பு, ஞானம் மற்றும் தயவினால் சூழ்ந்துகொள்ளும். உங்கள் பிள்ளை இந்த உலகத்திற்கு ஒளியாக எழும்புவதை காண, ஜெபத்தில் ஒன்றாக இணைவோம்! மேலும் அறிய அல்லது சேர, www.jesuscalls.org-ஐ பார்வையிடவும்.

### காருண்யா பல்கலைக்கழகம்

NAAC A++, UGC பிரிவு 1 மற்றும் டைம்ஸ் உயர் கல்வி (THE) உலக பல்கலைக்கழக தரவரிசை 2025-ல் உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான காருண்யா பல்கலைக்கழகம், பொறியியல், AI, உயிரி தொழில்நுட்பம், விவசாயம் மற்றும் பலவற்றில் உயர்மட்ட திட்டங்களை வழங்குகிறது. ICAR, NBA மற்றும் QS I-GAUGE Diamond ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்ட இது, 100% வேலைவாய்ப்புகள் மற்றும் உலகளாவிய பயிற்சிகளை உறுதி செய்கிறது. தொழில்-கூட்டுப் படிப்புகள் மற்றும் அதிநவீன ஆராய்ச்சி புதுமையை வளர்க்கிறது. மற்றும் 85-க்கும் மேற்பட்ட நாடுகளில் சர்வதேச பயிற்சி வாய்ப்புகளை வழங்குகிறோம். எங்கள் படிப்புகள் தொழில்துறை கூட்டாண்மைகள் மூலம் வலுப்படுத்தப்படுகின்றன. கூகிள் உடன் இணைந்து B.Tech கணினி அறிவியல் மற்றும் பொறியியல், AMARON உடன் இணைந்து M.Sc. எரிசக்தி அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், FESTO உடன் இணைந்து B.Tech ரோபாட்டிக்ஸ் மற்றும் ஆட்டோமேஷன், மற்றும் ஜோஹோ-வின் (Zoho) ஒருங்கிணைந்த கருவிகள் மற்றும் பயிற்சியால் மேம்படுத்தப்பட்ட MBA திட்டம். ரூ.10 கோடிக்கும் மேலான மதிப்புள்ள உதவித்தொகைகள் மற்றும் கிறிஸ்தவ மாணவர்களுக்கு முழு கல்விக் கட்டண சலுகை வழங்க வழி செய்யப்பட்டுள்ளது. சேர்க்கைக்கு http://www.karunya.edu-ஐ பார்வையிடவும். கல்வியின் மூலம் சிறப்பும் மாற்றமும் தொடரும் வகையில் காருண்யாவின் பயணத்திற்காக ஜெபிக்கவும்.

### இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம்

இம்மானுவேல் டிஜிட்டல் திட்டம் (EDP) என்பது இயேசு அழைக்கிறார் கொண்டு வந்த கர்த்தரால் உந்தப்பட்ட முயற்சியாகும். இது, தரம் வாய்ந்த வாடிக்கையாளர் தொடர்பு மேலாண்மை (CRM), இணையத்தளம் மற்றும் மொபைல் செயலி மூலம் நிகழ்நேர பிரார்த்தனை, போதனை மற்றும் ஆதரவை கொண்டுவருகிறது. ஆழமான, வேகமான, பங்காளர் இணைப்புகளை இலக்காக கொண்ட EDP, அவசர பிரார்த்தனைகள், கூட்டங்களை அணுகும் வழிகள் மற்றும் பாதுகாப்பான வழியில் நன்கொடை செலுத்துதல் ஆகியவற்றை செயல்படுத்துகிறது. இதன் பணி முன்னேறி வருகிறது, ஆனால் ரூ.5 கோடி இன்னும் தேவைப்படுகிறது. உங்கள் ஆதரவு, கிறிஸ்துவின் அன்பால் வாழ்க்கையில் மாற்றங்களை கொண்டுவர உதவுகிறது. இன்று https://www.jesuscalls.org இணையதளத்தில் பங்கெடுத்து, உலகம் முழுவதிலும் உள்ள கோடிக்கணக்கானோருக்கு நம்பிக்கையை டிஜிட்டல் வாயிலாக பகிருங்கள்.

### எங்களுக்காக ஜெபிக்க சிறப்பு நாட்கள்

**உங்கள் அன்பு, ஆதரவு மற்றும் ஜெபங்கள், இந்த ஊழியத்தை தொடர்ந்து தாங்கி வருகிறது**

ஜூன் 2, 1989, என் அன்பு மனைவி, சகோதரி இவாஞ்சலின் பால் தினகரனுக்கும் எனக்கும் மிகவும் சந்தோஷமான நாள். இது கர்த்தர் எங்களை பரிசுத்த விவாகத்தில் இணைத்த நாள். எங்கள் திருமண வாழ்வில், கர்த்தருடைய 36 ஆண்டுகால உண்மையைக் கொண்டாடும் இந்நாளில், அவர் எங்கள் வாழ்க்கையில் பொழிந்த எல்லா ஆசீர்வாதங்களுக்காக நாங்கள் நன்றியால் நிறைந்திருக்கிறோம். அனைத்தும் அவருடைய மகிமைக்காக, இதிலும் பெரிதான காரியங்களில் கர்த்தர் எங்களை பயன்படுத்துவார் என்று விசுவாசித்து நாங்கள் இணைந்து தொடரும் இந்த பயணத்தில், நீங்கள் தொடர்ந்து எங்களுக்காக ஜெபிக்கும்படி தாழ்மையுடன் கேட்கிறேன்.

ஜூன் 29, அன்று தனது பிறந்தநாளை கொண்டாடும் என் அருமை பேத்தி கேட்லின் அன்னா தினகரனுக்காகவும் நீங்கள் ஜெபிக்கும்படி நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இயேசுவின் அன்பிலும் அறிவிலும் அவள் தொடர்ந்து வளரவும், உலகெங்கிலும் உள்ள கோடிக்கணக்கானோருக்கு அவள் ஒரு ஆசீர்வாதமாக இருக்கவும் எங்களோடு சேர்ந்து ஜெபியுங்கள்.

### வரவிருக்கும் கூட்டங்கள்

- நவம்பர் 28-30 - BLESS மகாராஷ்டிரா பிரார்த்தனை திருவிழா

இந்த வரவிருக்கும் கூட்டங்களுக்காக உங்கள் ஜெபத்தையும் ஆதரவையும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். உங்கள் ஈடுபாடு, அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்துகிறது. மேலும் விவரங்களுக்கு, எங்கள் பங்காளர் பராமரிப்பு குழுவை 044-23456677 என்ற எண்ணில் தொடர்புகொள்ளவும் (காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை).

அன்புள்ள பங்காளரே, சங்கீதம் 138:8-ல், ஆண்டவர் தந்துள்ள வாக்குத்தத்தின்படியே, அவர் உங்களுக்காக யாவையும் செய்து முடிப்பார் என்பது உறுதி. அவர் உங்கள் ஒவ்வொரு தேவையையும் சந்தித்து, உங்களை தம்முடைய தெய்வீக இளைப்பாறுதலுக்குள் நடத்தி செல்வார். இந்த மாதம் முழுவதும் கர்த்தர் தம்முடைய ஞானத்தினால் உங்களை வழிநடத்தி, நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் தம்முடைய மகிமையால் உங்களைப் பிரகாசிக்க செய்வாராக.

உங்களுக்காக ஜெபிக்கும் உங்கள் சகோதரர்,

Dr. பால் தினகரன்.



# ரூர்கேலாவுக்கு தேவை
# இயேசு

ஜெபத்தின் மூலம் மனிதர்கள் மாற்றங்கள் பெரும் நம்பிக்கையின் இடங்களாக, இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரங்கள் விளங்குகின்றன. இந்த ஜெப கோபுரங்களில் ஒவ்வொரு நாளும் நடக்கும் மகத்துவமான அற்புதங்களுக்காக நாங்கள் கர்த்தருக்குள் மகிழ்ச்சியடைகிறோம்.

ஒடிசாவில் அமைந்துள்ள ரூர்கேலா 7 லட்சம் மக்கள் தொகையுடன் வளர்ந்து வரும் ஒரு பட்டணமாகும். ஆனாலும், அங்கு வசிப்பவர்களுக்கு ஆவிக்குரிய, உணர்ச்சிகரமான மற்றும் தனிப்பட்ட சவால்கள் உள்ளன. இங்கிருந்து தினமும் எங்களுக்கு வரும் ஜெப விண்ணப்பங்கள், மக்கள் குணம் பெறவும், சீர்ப்படவும் ஏங்குவதைக் காட்டுகின்றன. சில முக்கியமான பிரச்னைகள்:

- அசுத்த ஆவிகளின் பிடியிலிருந்து, அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை
- முறிந்த திருமண உறவு சீராகவும், தவறான உறவுகளிலிருந்து விடுதலை பெறவும்
- ரூர்கேலாவிலுள்ள இளம் வயதினருக்கு பக்தியுள்ள வாழ்க்கைத்துணை கிடைக்க வழிகாட்டுதல் பெறவும்
- வேலை சார்ந்த முயற்சிகளில் திருப்புமுனை உண்டாக
- ரூர்கேலாவில் உள்ள மக்கள் ஆவிக்குரிய அசைவாடுதலை வாஞ்சிக்கிறார்கள்

**ரூர்கேலாவை சேர்ந்த சகோதரர் ஜான் ஹோலிடே நாக் பால் என்பவர் சொல்வதை கேளுங்கள்**

**தேர்வுகளில் கர்த்தரின் தயவு**

“என் மகளின் மாநிலத் தேர்வுகளுக்காக ரூர்கேலா ஜெப கோபுரத்தின் ஜெபத்தை நாடினேன். கர்த்தரின் கிருபையால், அவள் 98% மதிப்பெண்கள் பெற்று, அவளுடைய பள்ளியிலும், மாவட்டத்திலும் முதலாவது இடத்தை பிடித்தாள். என்னுடைய இரண்டு பிள்ளைகளும் இயேசு அழைக்கிறார் ஊழியத்தில் இளம் பங்காளர்கள். கர்த்தரின் மகிமைக்காக அவர்கள் தங்கள் வாழ்க்கையில் பிரகாசிக்கிறார்கள்!”

---

**அன்புள்ள பங்காளரே,**

ரூர்கேலாவையும், அதை சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள மக்களுக்கு நம்பிக்கையையும், சுகத்தையும் கொண்டு வருவதில் ரூர்கேலா ஜெப கோபுரம் முக்கிய பங்கு வகிக்கிறது. ஜெபத்தினாலும் ஸ்தானாபதி ஊழியத்தினாலும், ரூர்கேலா மக்களை ஆசீர்வதிக்கும் இந்த தெய்வீக பணி தொடர, நீங்கள் உதாரத்துவமாய் கொடுப்பதன் மூலம், உங்கள் ஆதரவை பெறுவது பாக்கியமானது.

தற்சமயம், இவற்றை உருவாக்க ஆயத்தப்படுகிறோம்: நகரத்தில் 1,000 ஜெப வீரர்கள்

SEESHA வெளிக்கள சேவைகள் மூலம் நான்கு முக்கிய மாவட்டங்கள் மற்றும் பழங்குடி சமூகத்தினருக்கு ஊழியம் செய்ய ஸ்தானாபதிகள், வாலிபத் தலைவர்கள் மற்றும் சுவிசேஷகர்கள்

## ரூர்கேலாவில் (ஒடிசா) மக்களுக்கு தேவ வல்லமையை கொண்டு வர உதவுங்கள்

வாருங்கள், அநேகருக்கு ஆசீர்வாதமாக திகழுங்கள்! நீங்கள் தன்னார்வ சேவை செய்ய விரும்பினால், உங்கள் விவரங்களை volunteer@jesuscalls.org என்ற முகவரிக்கு அனுப்பவும். அல்லது 6380752301 (காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை) என்ற எண்ணில் ஜெப கோபுர மேலாளரை தொடர்புகொள்ளவும்.

கர்த்தர் அருளிய இந்த பணியை நிறைவேற்ற, உங்கள் பிரார்த்தனை மற்றும் காணிக்கையை நாங்கள் நாடுகிறோம். உங்கள் உதாரத்துவமான காணிக்கை, எண்ணற்றோர் தங்கள் வாழ்க்கையில் கர்த்தரின் அற்புத வல்லமையை அனுபவிக்க உதவும். நீங்கள் ரூ. 1 லட்சம், ரூ.50,000/-, ரூ.10,000/- அல்லது ஆண்டவருடைய வழிநடத்துதலின்படி எந்த தொகையையும் செலுத்தலாம்.



கர்த்தர் நியமித்த இந்த ஊழியத்தை காணிக்கை மூலம் ஆதரிக்க, www.jesuscalls.org-ஐ பார்வையிடவும் அல்லது QR குறியீட்டை ஸ்கேன் செய்து வழங்கவும்.

இந்தப் பணியில் நீங்கள் பங்களிக்கும்போது, கர்த்தர் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பார்.

# இளம் பங்காளர் திட்டத்தில் *இணைந்திடுங்கள்*



**நிலையான அரசு வேலை**



என் தாயார் மூலம் இளம் பங்காளர் திட்டத்தில் சேர்க்கப்பட்ட நான், என் படிப்பில் வெற்றி பெறவேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். அவ்வாறே, கர்த்தருடைய கிருபையால், 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியடைந்தேன். ஆனால், அந்த சமயத்தில் நான் என் தந்தையை இழந்தேன். என் சந்தோஷம் துக்கமாக மாறி, எங்கள் குடும்பத்தை பணப்பிரச்சனையில் ஆழ்த்தியது. எனினும், "ஆண்டவரே, நான் ஒரு இளம் பங்காளர்; நீர் எனக்கு உதவி செய்வீர்" என்று விசுவாசத்தோடு அறிக்கையிட்டேன். அவரும் என் பட்டப்படிப்பில் 9.3 CGPA-ஐ எனக்கு தந்து ஆசீர்வதித்தார். பிறகு, அரசு வேலைக்கான தேர்வுகளில் பல சிக்கல்களை சந்தித்தேன். ஆனால், என் தாய், என்னை வேலை ஆசீர்வாதத் திட்டத்தில் சேர்த்தார்கள். ஜெப கோபுரத்தில் நடைபெற்ற உபவாச கூட்டங்கள் மற்றும் U-Turn கூட்டங்களில் கலந்துகொண்டபோது, கர்த்தர் என்னை ஆழமாக தொட்டார். அற்புதமாக எனக்கு ஒரு அரசாங்க வேலை கிடைத்தது. நான் என் பூமிக்குரிய தந்தையை இழந்தாலும், என் பரலோக தந்தையான இயேசு, என்னை அழகாக நிலைநிறுத்தினார். - **கவிதா**, ஞூர்கேலா.

**சகோதரி கவிதாவைப் போலவே, உங்கள் பிள்ளைகளையும் நீங்கள் இந்த திட்டத்தில் சேர்க்கும்போது, அவர்களும் நம்பிக்கை நிறைந்த எதிர்காலத்தைப் பெறுவார்கள்.**




# உங்கள் பிள்ளைகளை *இயேசுவிடம் ஒப்படையுங்கள்*

இளம் பங்காளர் திட்டம், உங்கள் பிள்ளைகள் தங்கள் பாதுகாப்பு, செழிப்பு மற்றும் வெற்றியைப் பெற ஜெபத்தினாலே மூடப்படுகிறார்கள் என்பதை உறுதி செய்கிறது. இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்ததுபோல (லூக்கா 2:52), இந்த திட்டத்தில் இணைந்திருக்கும் பிள்ளைகள், தங்களைக் குறித்த தெய்வீக திட்டத்தில் வளருகிறார்கள். தொடர் பிரார்த்தனைகள் மற்றும் அவர்களுடன் பகிர்ந்துகொள்ளப்படும் விசுவாச வளர்ச்சியை தரும் ஆதாரங்கள் மூலம், வாழ்க்கையின் சவால்களை சமாளிக்க அவர்கள் பாதுகாக்கப்பட்டு பலப்படுத்தப்படுகிறார்கள். உங்கள் பிள்ளையை இத்திட்டத்தில் இணைப்பதன் மூலம், அவர்கள் வளரவும், பிரகாசிக்கவும், இயேசுவைப் போல உறுதிப்படவும், அவர்களை கர்த்தருடைய கரங்களில் சமர்ப்பிக்கும் விசுவாசத்தின் ஒரு படியாகும்.

**இளம் பங்காளர்களுக்கான ஆசீர்வாதங்கள்:**

- ஜெப கோபுரத்திலுள்ள ஜெப வீரர்கள், ஒவ்வொரு நாளும் இளம் பங்காளர்களுக்காக ஜெபிப்பார்கள். குறிப்பாக, இளம் பங்காளரின் பெயரை குறிப்பிட்டு, திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தெய்வீக ஆசீர்வாதங்களாலும் அவர்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்று ஜெபிப்பார்கள்.
- தனிப்பட்ட பிறந்தநாள் ஜெபங்கள், வாழ்த்துக்கள், சான்றிதழ்கள் மற்றும் பங்காளர் கூட்டங்களில் Dr. பால் தினகரனின் தனி ஜெபத்தையும் பெறலாம்.

மேலும் விவரங்களுக்கு: மின்னஞ்சல்: ypp@jesuscalls.org
ஜெப கோபுரம்: உங்கள் பகுதியில் அமைந்திருக்கும்
இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தை அணுகலாம்
இணையதளம்: www.jesuscalls.org தொலைபேசி எண்: 98409 00477
முகவரி: ஜெப கோபுரம், 16, Dr. டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 600 028.
இளம் பங்காளர் திட்டத்திற்கு உங்கள் காணிக்கையை எளிதாக அனுப்பக்கூடிய வழிகளை இந்த இதழின் 13-ம் பக்கத்தில் காணலாம்.

என் நண்பரே, இன்று நம்பிக்கையின் நாள்.

நீங்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் இருந்தாலும், நம்முடைய தேவன் புதிய ஆரம்பத்தைக் கொடுக்கிறவர் என்பதை உங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். “முந்தினவைகளை நினைக்கவேண்டாம்; பூர்வமானவைகளை சிந்திக்கவேண்டாம். இதோ, நான் புதிய காரியத்தை செய்கிறேன்” என்று வேதாகமம் கூறுகிறது (ஏசாயா 43:18-19). உங்களைக் குறித்த தேவனுடைய செயல் இன்னும் முடியவில்லை. மாறாக, அவர் உங்கள் வாழ்வில் ஒரு புதிய காரியத்தை தொடங்க இருக்கிறார்! அந்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் வாழுங்கள்.

# வழியில்லாத இடத்தை கர்த்தர் திறக்கும்போது

வாலிபர் பகுதி

– சகோ. சாமுவேல் தினகரன்



“அவர்கள் பயப்படாதபடிக்கு அவர்களை பத்திரமாய் வழிநடத்தினார்; அவர்கள் சத்துருக்களை கடல் மூடிப்போட்டது” (சங்கீதம் 78:53). இது, இஸ்ரேலின் வரலாற்றில் ஒரு பயங்கரமான நிகழ்வை குறிக்கிறது. இஸ்ரவேலர் சிவந்த சமுத்திரத்தின் கரையிலே, இக்கட்டான நிலையில் நின்றுகொண்டிருந்தார்கள். பார்வோனின் சேனை அவர்களுக்கு பின்னே துரத்திக்கொண்டு வந்தது. அவர்களுக்கு முன்னால், ஒரு மிகப்பெரிய சமுத்திரம் அவர்களுடைய வழியைத் தடுத்தது. அவர்களால் முன்பாகவும் செல்ல முடியவில்லை; பின்பாகவும் போக முடியவில்லை.

ஒருவேளை, நீங்கள் சந்திக்கிற கடினமான சூழ்நிலை பெரிதாக தோன்றி, அதிலிருந்து விடுபட வழியின்றி காணப்படலாம். நீங்கள் சமுத்திரம் போன்ற பிரச்சனையை கடக்க முடியாமல், கடலின் மறுபக்கத்தில் இருப்பதுபோல் உணரலாம். “ஆண்டவர் ஏன் இந்த இடத்திற்கு என்னை கொண்டு வந்தார்? எல்லையின் முடிவுக்கு நேராக அவர் என்னை ஏன் நடத்தினார்?” என்று நீங்கள் கேட்கக் கூடும். ஆனால், ஆண்டவர் அதை அற்புதத்திற்கு சரியான இடமாக மாற்றுகிறார்.

தேவன், இஸ்ரவேலர்களை கைவிடுவதற்காக சிவந்த சமுத்திரத்திற்கு கொண்டு வரவில்லை. அவர், தம்முடைய வல்லமையை காண்பிக்கும்படி அங்கு கொண்டு வந்தார். வழியே இல்லாத இடத்தில், வழியைத் திறப்பதற்காகவே கொண்டுவந்தார். உங்களுக்கும் அப்படியே செய்வார். அவர்களுடைய பாதையை தடுப்பதுபோல தோன்றிய அதே சமுத்திரம், அவர்களுக்கு விடுதலையின் பாதையாக மாறியது. இன்னும் ஆச்சரியப்படும் காரியம் என்னவென்றால், இஸ்ரவேலருக்கு திறந்து



samuel@jesuscalls.org samueldhinakaranofficial

கொடுத்த அதே சிவந்த சமுத்திரம், அவர்களுடைய எதிரிகளை விழுங்கிப் போட்டது. தேவனுடைய பிள்ளைகள் முன்னேறி செல்வதற்கு வழியாக காணப்பட்டது எதுவோ, அவர்களுக்கு தீங்கு செய்ய நினைத்தவர்களுக்கு அதுவே கண்ணியாக மாறியது.




ஆம், நம் ஆண்டவர் இப்படித்தான் செயல்படுகிறார். அவர் உங்களை சாதாரணமாக விடுவிப்பதில்லை. உங்களை துரத்துபவர்களை தோற்கடித்து, விடுவிக்கிறார்.

எஸ்தர் புத்தகத்தில் காணப்படும் ஆமானின் கதையை கவனித்துப்பாருங்கள். பெர்சியாவில், ஆமான், ஒரு உயர் பதவியில் இருந்தவன். அவன், மொர்தெகாய் என்ற மனிதனை வெறுத்தான். பெருமை மற்றும் பொறாமையின் காரணமாக, மொர்தெகாயை தூக்கிலிட தூக்குமரத்தை செய்வித்தான். ஆனால், ஒரு தெய்வீக திருப்பம் ஏற்பட்டு, காரியம் தலைகீழாய் மாறியது. ஆமான், தான் செய்வித்த அதே தூக்குமரத்திலேயே தூக்கிலிடப்பட்டான். மற்றொருவருக்கு அவன் வைத்த கண்ணி, அவனுடைய வீழ்ச்சிக்கே காரணமாயிற்று.

தம்முடைய பிள்ளைகளுக்கு விரோதமாக சூழ்ச்சி செய்பவர்களை, ஆண்டவர் இவ்விதமாக கையாளுகிறார். தீய திட்டங்களை அவர்களுடைய தலையின்மேல் திருப்புகிறார். துன்மார்க்கர் தங்கள் வலையில் விழும்போது, ஆண்டவர் தம்மை நம்பியவர்களை உயர்த்துகிறார்.

ஒருவேளை நீங்களும் அப்படிப்பட்ட சிவந்த சமுத்திரத்தை எதிர்கொள்ளும்போது, அது ஒரு பெரிய தடையாக, வேதனையான சூழ்நிலையாக அல்லது நம்பிக்கையற்ற தருணமாக இருக்கலாம். ஆனாலும், தேவனால் வழியை உண்டாக்க முடியும் என்பதை நீங்கள் அறியும்படிக்கே அவர் உங்களை அந்த இடத்திற்கு அழைத்து வந்திருக்கக்கூடும்.

சிவந்த சமுத்திரத்தை பிளந்தவர், சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டவர், உங்களுக்கு வரவிருந்த தீமையை சாட்சியாக மாற்றியவர், இன்னும் தேவனாகவே இருக்கிறார். ஆகவே, பயத்திற்கு பதிலாக விசுவாசத்தில் நடவுங்கள். உங்கள் முன்னால் காணப்படும் சமுத்திரத்தைப் பார்க்காமல், உங்கள் அருகே இருக்கும் இயேசுவை நோக்கிப் பார்க்க உங்கள் கண்களை உயர்த்துங்கள். அவர் உங்களைப் பாதுகாப்பாக வழிநடத்துவார். நீங்கள் பயப்படமாட்டீர்கள். உங்கள் எதிரிகளை திணறடிக்கும் செயல்...உங்களை விடுவிக்கும் செயலாகவே மாறும். நாம் அதை விசுவாசித்து பெற்றுக்கொள்வோம்!

## தஞ்சாவூரில் உள்ளமுடைந்தோரை தொட்டு சுகப்படுத்துதல்

தஞ்சாவூரில் உள்ள சி.எஸ்.ஐ. செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தின் பாரீஸ் ஹாலில், ஏப்ரல் 26, 2025 அன்று நடைபெற்ற பங்காளர் கூட்டத்தில் 800 பேர் கலந்துகொண்டனர்.

Dr. பால் தினகரன், இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தின் மூலம் ஏற்படுத்தின சமாதான உடன்படிக்கையைக் குறித்து, கொலோசெயர் 1:20-ஐ முக்கியப்படுத்தி, தேவ செய்தியளித்து, பங்காளர்களின் ஆசீர்வாதங்களுக்காக உருக்கமாக ஜெபித்தார். சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், அபிஷேகத்தால் நிறைந்த ஜெபத்தை நடத்தி, பரிசுத்த ஆவியின் நிறைவுக்காக, சுகத்திற்காக, மறுவாழ்வுக்காக மற்றும் சந்தோஷத்தின் நிறைவுக்காகவும் ஜெபித்தார்கள். ஒவ்வொரு பங்காளருக்கும், ஆண்டவருடைய அன்பினாலும் மனதுருக்கத்தினாலும் நிறைந்து தனித்தனியே ஜெபித்தனர்.

ஏப்ரல் 27, 2025 அன்று, God's House வளாகத்தில் நடந்த குடும்ப ஆசீர்வாத சிறப்பு ஞாயிற்றுக்கிழமை ஆராதனையில் அவர்கள் ஊழியம் செய்தனர். கர்த்தரின் வார்த்தையையும், தங்கள் குடும்பங்களுக்கு ஆசீர்வாதங்களையும் பெற நூற்றுக்கணக்கானோர் கூடி வந்தனர். இரண்டு கூட்டங்களிலும் கர்த்தருடைய மகத்துவமான பிரசன்னத்தினால் நிரம்பியதுடன், கலந்துகொண்ட அனைவருக்கும் சுகத்தையும், விடுதலையையும், சமாதானத்தையும் கொண்டு வந்தது.









# நீங்கள் தேவனுடைய வீட்டாருமாயிருக்கிறீர்கள்!

- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

இந்த விதமான வாழ்க்கை எத்தகைய ஆசீர்வாதம் நிறைந்தது என்பதை ஆராய்ந்து தியானித்து, அத்தகைய ஆசீர்வாதத்தை நாம் ஒவ்வொருவரும் நம்முடைய சொந்த வாழ்வில் பெற்றுக்கொள்ளப் போகிறோம். இத்தகைய தெய்வீகம் நிறைந்த வாழ்வை இவ்வுலகில் நாம் யாவரும் பெற்று அனுபவிக்க வேண்டும் என்பதற்காகவே, தேவாதி தேவன் தம்முடைய சொந்தக் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இப்பூவுலகில் ‘‘இரட்சகராக’’ மனுவுரு எடுத்து வரும்படி சித்தம் கொண்டார். அவராலேயல்லாமல் வேறு எவராலும் இரட்சிப்பை நமக்கு அருள முடியாது. இதற்காக சிலுவையிலே அவரே தம் ஜீவனை தியாகபலியாக அர்ப்பணித்தார்.

### நீங்கள் தேவனுடைய வீட்டார்

**‘‘நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்’’**

(எபேசியர் 2:19,20)

நம்முடைய பழைய பாவ வாழ்க்கை எப்படிப் பட்டதாயிருந்தது? எபேசியர் 2:2-5 வரையுள்ள வசனங்களில், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்காக சிலுவையில் செய்த தியாகத்தினிமித்தம், நாம் தேவனுடைய வீட்டாராகும் தெய்வீகக் கிருபையைப் பெற்றோம்.

லூக்கா சுவிசேஷம் 19ஆம் அதிகாரத்தில், உயரத்தில் குள்ளமானவனும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி அதிகம் அறியாதவனுமாகிய, சகேயு என்ற மனிதனின் வாழ்வு எவ்வாறு கர்த்தராகிய இயேசுவுக்கு சொந்தமாகவும், அவனுடைய வீட்டார் தேவனுக்கு பிரியமானவர்களாகவும் மாறினார்கள் என்பதைக் குறித்து தெளிவாக வாசிக்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, சகேயுவின் ஊரான எரிகோ பட்டணத்தின் வழியே ஒருமுறை போனபொழுது, அவரை அவன் சந்திக்க நேர்ந்ததையும், அதின் மூலம் அவனுக்கும், அவன் வீட்டாருக்கும் இரட்சிப்பு கிடைத்து, அவர்கள் அனைவரும் தேவனுக்கு சொந்தமான வீட்டாராக மாறிய அற்புதத்தையும் நாம் வேத புத்தகத்திலே தெளிவாக வாசிக்கிறோம்.

அதேபோன்று அப்போஸ்தலர் 9-ஆம் அதிகாரத்தில், ஆண்டவராகிய இயேசுவுக்கு விரோதமாக பல காரியங்களை செய்து, கேட்டின் புத்திரனாக வாழ்ந்து வந்த சவுல் என்ற மனிதன், எவ்வாறு கர்த்தருக்கு சொந்தமானவனாகவும், தேவனுடைய வீட்டை சுதந்தரிக்கும் தெய்வீக பாக்கியம் பெற்றவனாகவும் மாறினான் என்று தெளிவாக வாசிக்கிறோம். ரோமர் 9:23-ஆம் வசனத்தில் வாசிக்கிறபடியே, அழிவுக்கு எத்தனமாக்கப்பட்ட கோபாக்கினையின் பாத்திரங்களாக இருக்கிற ஒவ்வொருவரையும், தமது மகிமைக்கு எத்தனமாக்கப்பட்ட ‘‘கிருபா பாத்திரமாக’’ மாற்றும்படிக்கே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தம்மையே சிலுவையிலே தியாகபலியாக அர்ப்பணித்து, தமது இரத்தத்தை சிந்தி, நம்முடைய பாவங்கள், அக்கிரமங்கள், சாபங்கள் யாவற்றினின்றும் நம்மை விடுதலையாக்கி, 2 கொரிந்தியர் 5:17-ன்படி, கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாகவும், தேவனுக்கு சொந்தமான அவருடைய வீட்டாராகவும் மாற்றுவார். இவ்விதமான தெய்வீக வாழ்வைப் பெற்ற பவுல், ‘‘இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்’’ (கலாத்தியர் 2:20) என்று, தேவனுக்கு சொந்தமான வீட்டை சார்ந்தவனாக, மகிழ்ச்சியுடன் கூறினான்.

அருமையானவர்களே! உங்கள் ஒவ்வொருவரையும் ‘‘தேவனுடைய வீட்டாராக’’ மாற்றியமைக்கவே தேவன் விரும்புகிறார். நீங்களும் சிலு

வையை மாத்திரம் நோக்கிப் பாருங்கள். கர்த்தர் உங்கள் வாழ்விலும் அற்புதம் செய்து, உங்களுக்கும் இந்த பாக்கியமான தெய்வீக வாழ்வை அருளிச் செய்வார். நீங்கள் கிறிஸ்துவுக்கு சொந்தமான அவருடைய வீட்டாராக மாறுவீர்கள். "இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" என்று நீங்களும் கூறி ஆனந்த சந்தோஷமடைவீர்கள்.

## கர்த்தருடைய ஆசீர்வாதம் நிறைந்த வீடு

**"கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும், அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்"** (நீதிமொழிகள் 10:22)

இது, தாம் தெரிந்துகொண்ட மனிதனாகிய ஆபிரகாமுக்கு அருளிய தெய்வீக ஆசீர்வாதம்!

**"நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னை சபிக்கிறவர்களைச் சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்"** (ஆதியாகமம் 12:2,3)

அவ்வாறே கர்த்தரை தன் சிறுவயது முதலே பயபக்தியோடு தேடினவன் யோசேப்பு. கர்த்தர் சொப்பனங்கள் மூலமாக அவனோடு பேசுகிற அளவுக்கு, அவ்வளவாய் தேவன் அவனுக்கு சமீபமாய் இருந்தார். அவன் வீட்டார் அதைக் குறித்து எரிச்சலடைந்து, அதை நம்பாமல், அவனுடைய வாழ்வையே அழித்துப்போட முயற்சித்தார்கள். ஆனால், அந்த நிலைமையிலும் யோசேப்பு உண்மையோடும், உத்தமத்தோடும் தேவனை பயபக்தியுடன் தேடினதினிமித்தம், அவர் அவனோடு கூடவே இருந்தார். அவன் சந்தித்த பாடுகள் அனைத்திற்கும் பின்பாக, சொல்லிமுடியாத அளவுக்கு ஆசீர்வாதங்களினால் தேவன் அவனை ஆசீர்வதித்ததோடு, அவனிமித்தம் அவனுடைய குடும்பத்தாரும் ஏராளமான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளும்படி செய்தார். ஆம், இதினிமித்தம்தான் தாவீதும்கூட,

**"கர்த்தரை தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது"** (சங்கீதம் 34:10)

என்று எழுதியிருக்கிறான்.

அன்பானவர்களே, இன்றைக்கு உங்களில் அநேகர் உங்களுடைய தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப வாழ்விலும் பல்வேறு விதங்களில் ஆசீர்வாதம் எதுவுமே இல்லாமல் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கலாம். அநேகர் ஆசீர்வாதங்களுக்கு பதிலாக பற்பல பாடுகள் வழியாகப் போகிறபடியால், தங்கள் வாழ்வையே முடித்துக்கொள்ளவும் முயற்சி செய்கிறார்கள். அவ்வளவாக துக்கம் அவர்களை வாட்டி வதைக்கிறது. ஆனால், ஆபிரகாம், யோசேப்பு போன்ற பக்தர்களைப் போல் கர்த்தரை உறுதியாய் பற்றிப் பிடித்துக் கொண்டு, அவர்மேல் முழு விசுவாசம், நம்பிக்கை வைத்து வாழும் தமது தாசர்களையோ, அவர் ஒரு போதும் கைவிடாதவராக இருக்கிறார். இன்றைக்கும் தம்மை உண்மையாய் பற்றிக்கொள்கிற தம்முடைய தாசர்களுக்கு, அவர்கள் விரும்புகிறதற்கும், வேண்டிக் கொள்வதற்கும் மேலான ஆசீர்வாதங்களை கர்த்தர் அருளிச் செய்வார்.

> சிலுவையை மாத்திரம் நோக்கிப் பாருங்கள். அப்பொழுது நீங்கள் கிறிஸ்துவுக்கு சொந்தமான அவருடைய வீட்டாராக மாறுவீர்கள்

பல வருடங்களுக்கு முன்பு, என்னுடைய கணவர், சகோ.டி.ஜி.எஸ். தினகரன் அவர்களின் வேலையினிமித்தம் இடமாறுதல் பெற்று நாங்கள் சென்னைக்கு வந்தபொழுது, வாடகைக்கு வீடு எடுத்து தங்க வேண்டிய நிலைமை வந்தது. ஆகவே, எங்கள் வசதிக்கேற்றபடி, ஒரு சிறிய வீட்டை வாடகைக்கு எடுத்து தங்க முயற்சி செய்தோம். ஆனால், அந்த குறைவான நிலைமையிலும், கர்த்தர் எங்களுக்கு அருளியிருந்த அவருடைய ஊழியத்தை பயபக்தியோடும், உண்மையோடும் செயல்படுத்தி வந்தோம். "**உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான்...**" (நீதிமொழிகள் 28:20) என்ற வசனத்தின்படி, என் கணவர் பணிபுரிந்த வங்கியில், சொசைட்டி (society) மூலமாக, சென்னை அரும்பாக்கம் பகுதியில், ஒரு பெரிய வீட்டை கர்த்தர் எங்களுக்கு மிகவும் அற்புதமான விதத்தில், சொந்தமாகவே கொடுத்து ஆசீர்வதித்தார். அநேக மக்கள் அந்த வீட்டிற்கு ஜெபத்திற்காக வந்து, கர்த்தருடைய ஆசீர்வாதத்தை நிறைவாய் பெற்று சென்றனர். அங்குதான் "இயேசு அழைக்கிறார்" ஊழிய அலுவலகம் தனி அறையில் மிகவும் சிறப்பான விதத்தில் முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்டது.

எனக்கு அருமையானவர்களே, இதே தேவன் உங்கள் குறைவுகளையெல்லாம்கூட மாற்றி, அதே வண்ணமாக தம்முடைய சம்பூரண ஆசீர்வாதங்களினால் உங்களையும் நிரப்புவார்.

## நீங்கள் தேவனுடைய வீட்டாரும், அவருடைய ஆலயமுமாயிருப்பீர்கள்

(எபேசியர் 2:19)

நோவா மற்றும் ஆபிரகாம் போன்ற பக்தர்கள் நிமித்தம், கர்த்தர் அவர்களை மட்டுமல்லாமல், அவர்களுடைய குடும்பத்தாரையும் தமது தெய்வீக ஆசீர்வாதங்களினால் நிரப்பினார். இன்றைக்கு நீங்கள் குடும்பமாக, சந்ததி சந்ததியாக தேவ பக்தியுள்ளவர்களாக, கர்த்தருக்கென்று நற்சாட்சிகளாக எழும்பிப்

பிரகாசிக்கிறீர்களா? யோசுவா என்ற தேவ மனிதன், “**நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம்**” (யோசுவா 24:15) என்று தன் குடும்பத்தோடு உண்மையாய் கர்த்தரை சேவித்தான். அப்போஸ்தலர் நடபடிகள் 10ஆம் அதிகாரத்தில், கொர்நேலியு என்ற மனிதனின் குடும்ப வாழ்வில் பெற்ற தெய்வீக ஆசீர்வாதத்தைக் குறித்து அழகாக வாசிக்கிறோம். அவன் யூதனல்ல, ஒரு புறஜாதியான். இருந்தாலும், அப்போஸ்தலர் 10:2-ல், “அவன் தன் வீட்டார் அனைவரோடும் தேவனுக்கு பயந்தவனாயிருந்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தான்” என்று வாசிக்கிறோம். அதினிமித்தம், கர்த்தர் தம்முடைய சீஷன் பேதுருவோடு பேசி, கொர்நேலியு வீட்டிற்கு பேதுரு வரும்படி செய்தார். கொர்நேலியுவோடும் அவ்வாறே பேசினார். அப்போஸ்தலர் 10ஆம் அதிகாரம் 5,6 ஆகிய வசனங்களில் இதை வாசிக்கிறோம். இதினிமித்தம் கொர்நேலியுவின் வீட்டை கர்த்தர் எப்படி ஆசீர்வதித்தார்?

“**அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாக கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்**” (எபேசியர் 2:21,22)

> கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும், அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்

நீங்கள் பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாயிருக்கிறீர்கள். இயேசு கிறிஸ்து தாமே அதற்கு மூலைக்கல்லாயிருக்கிறார். உங்கள் வீடு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது.

ஆம் பிரியமானவர்களே! இது கடைசி காலம். கர்த்தருடைய இரண்டாம் வருகை மிகவும் சமீபமாயிருக்கிறது. நீங்கள் தேவனுக்கு சொந்தமானவர்களாக, அவரது வீட்டாராக மாறியிருக்கிறீர்களா? கொர்நேலியு பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தினால் நீங்கள் குடும்பமாக நிரம்பியிருக்கிறீர்களா? லூக்கா சுவிசேஷம் 11:13ல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியிருப்பதைப்போல், கர்த்தரை நோக்கி குடும்பமாக ஒருமித்து, பயபக்தியோடு கேளுங்கள். கர்த்தர் வாக்கு மாறாதவர். “**கடைசி நாட்களில் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்**” (யோவேல் 2:28; ஏசாயா 44:3) என்று வாக்கருளிய தேவன் வாக்கு மாறாதவராக, அவரிடத்தில் கேட்கிற ஒவ்வொருவரும், அப்படிப்பட்ட தெய்வீக ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளும்படி நிச்சயம் கிருபைபுரிவார். கர்த்தருடைய ஆவியானவரின் நிறைவின் மூலமாக பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும், வரங்களினாலும் நிறைந்து, அவருக்கென்று நற்கனி தந்து, நற்சாட்சிகளாக விளங்க தேவன் தம்முடைய கிருபையை உங்கள் ஒவ்வொருவர் வாழ்விலும் அருளிச் செய்வாராக.

நீங்களும் சந்ததி சந்ததியாக, தேவ பக்தியுள்ள சந்ததியாக, ஆவியிலும் ஆத்துமாவிலும் சரீரத்திலும் தேவன் அருளும் தெய்வீக ஆசீர்வாதங்களால் நிரம்பி, அவர் நாமத்திற்கு மகிமையாக எழும்பிப் பிரகாசிப்பீர்கள். உங்களது குடும்ப வாழ்வு கர்த்தர் அருளும் தெய்வீக சமாதானத்தினால் நிறைந்திருக்கும் (சங்கீதம் 29:11). உங்கள் வாழ்விலுள்ள இல்லாமைகள் யாவும் இருக்கிறவைகளாக மாறி, பூரண ஆசீர்வாதத்தினால் நிரம்பியிருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக பரிசுத்த ஆவியின் நிறைவினால், தேவ வல்லமையால் உங்கள் வாழ்வில் காணப்படும் பாடுகள், துன்பங்களிலிருந்து நீங்கள் விடுதலை பெறுவதோடு, இன்னும் அநேகருடைய வாழ்வையும் ஆசீர்வாதமாக மாற்றும் கிருபையினால் நிரம்புவீர்கள். நீங்கள் தேவனுடைய வீட்டாராக மாறுவது, எத்தனை பாக்கியம்! எத்தனை மகிமை!!




## எஸ்தர் ஜெபக் குழுவின் மூலம் சந்தோஷம்: ஜெப சேவை



2025 மே 16 அன்று, ரூர்கேலா, ஒடிசாவை சேர்ந்த எஸ்தர் ஜெப குழு சகோதரிகள் 90 பேரையும் அவர்கள் குடும்பத்தினரையும் சகோதரி ஸ்டெல்லா தினகரன், சகோ.டி.ஜி.எஸ். தினகரன் நினைவு ஜெப கோபுரத்தில் சந்தித்தார்கள். அந்தக் குழுவினரை சகோதரி எம்லென் சுரின் வழிநடத்தி வந்தார்கள். எஸ்தர் ஜெபக்குழு ஊழியத்தின் நோக்கத்தையும் செயல்பாடுகளையும் வந்திருந்தவர்களுக்கு விளக்கி, அந்தக் குழுவில் அங்கம் வகித்து ஆசீர்வாதம் பெறும்படி சகோதரி அவர்கள் ஊக்குவித்தார்கள். ஒவ்வொரு சகோதரிக்கும் தனி ஜெபமும் ஏறெடுத்தார்கள். இந்தக் கூட்டத்தில் புதிதாக கலந்து கொண்ட அனைவரும் உற்சாகமடைந்தனர்; ஊழியம் ஏற்படுத்தும் தாக்கத்தை தேவ மகிமைக்கேற்க அது காட்டியது.

# இன்றைய இறை தியானம்

**ஜூன் - 2025**

**1** **மத்தேயு 11:28 - இளைப்பாறுதல் தரும் தேவன்**
**தியானத்திற்கு:** யாத். 33:14; யோசுவா 1:13; 2 நாளா. 14:6,7; 2 தெச. 1:6

**2** **ஏசாயா 60:3 - கர்த்தர் உங்களை ஒளியாக வைப்பார்**
**தியானத்திற்கு:** ஏசாயா 42:7; மத். 5:14-16; அப். 13:47; 1 யோவான் 1:5-7

**3** **2 கொரிந்தியர் 1:20 - வாக்குத்தத்தங்கள் கிறிஸ்துவுக்குள் நிறைவேறும்**
**தியானத்திற்கு:** அப்போஸ்தலர் 1:5; எபிரெயர் 6:15; 2 பேதுரு 3:9

**4** **எரேமியா 31:16 - உங்கள் கிரியைக்கு பலன்**
**தியானத்திற்கு:** 2 நாளா. 15:7; பிர. 9:7; மத். 16:27; வெளி. 22:12

**5** **2 தெசலோனிக்கேயர் 3:5 - தேவனைப் பற்றும் அன்பு**
**தியானத்திற்கு:** யோவான் 8:42; 14:21; 1 யோவான் 4:19-21

**6** **ஏசாயா 62:4 - கர்த்தர் உங்களில் பிரியமாயிருக்கிறார்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 22:20; சங். 147:11; எசே. 20:41; மத். 3:16,17

**7** **2 சாமுவேல் 22:33 - தேவன் நமக்கு அரணாயிருக்கிறார்**
**தியானத்திற்கு:** சங். 31:2,4; நீதி. 10:29; யோவேல் 3:16; நாகூம் 1:7

**8** **ஆகாய் 2:19 - கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்**
**தியானத்திற்கு:** ஆதி. 12:2,3; 1 நாளா. 13:14; சங். 128; எபே. 1:3



**9** **எரேமியா 30:17 - காயங்களை ஆற்றுவார்**
**தியானத்திற்கு:** யோபு 5:18; சங்கீதம் 147:3; ஓசியா 6:1

**10** **மாற்கு 9:23 - விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்**
**தியானத்திற்கு:** தானியேல் 6:23; மத்தேயு 15:21-28; அப். 14:8-10

**11** **நீதிமொழிகள் 4:22 - ஆரோக்கியம்**
**தியானத்திற்கு:** எரே. 33:6; மல்கியா 4:2; மத். 15:28; மாற்கு 5:25-29

**12** **வெளிப்படுத்தல் 3:8 - திறந்த வாசல்**
**தியானத்திற்கு:** 1 கொரி. 16:9; 2 கொரி. 2:12,13; கொலோ. 4:1-4

**13** **எபிரெயர் 10:38 - விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்**
**தியானத்திற்கு:** எசே. 18:9; ஆபகூக் 2:4; ரோமர் 1:17; கலா. 3:11

**14** **நீதிமொழிகள் 28:10 - நன்மையைச் சுதந்தரிப்பீர்கள்**
**தியானத்திற்கு:** சங். 85:12; 128:2; எரே. 32:40-42; மத். 7:11

**15** **ஏசாயா 40:29 - சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்**
**தியானத்திற்கு:** 1 நாளா. 29:12; சங்கீதம் 68:35; எபே. 3:7; 6:10

**16** **சங்கீதம் 52:8 - தேவனுடைய ஆலயம்**
**தியானத்திற்கு:** சங். 27:4; 1 கொரி. 3:16,17; 2 கொரி. 6:16; வெளி. 7:15

**17** **உபாகமம் 8:18 - கர்த்தர் ஐசுவரியத்தைத் தருகிறவர்**
**தியானத்திற்கு:** சங். 112:1-3; நீதி. 10:22; 22:4; 2 கொரி. 8:9; எபே. 3:19

**18** **சங்கீதம் 89:21 - நம்மை பலப்படுத்துகிற தேவன்**
**தியானத்திற்கு:** உபா. 33:25; ஏசாயா 49:5; பிலி. 4:13; 2 தீமோ. 4:17

**19** **உபாகமம் 14:2 - நீங்கள் கர்த்தருடைய ஜனம்**
**தியானத்திற்கு:** லேவி. 26:12; எரேமியா 7:23; 11:3; எபிரெயர் 8:10

**20** **கொலோசெயர் 1:27 - கிறிஸ்துவின் மகிமை**
**தியானத்திற்கு:** 2 கொரி. 4:6; பிலி. 4:19; கொலோ. 3:4; 2 தீமோ. 2:10

**21** **ஆதியாகமம் 17:20 - பெரிய ஜாதி**
**தியானத்திற்கு:** ஆதி. 46:3; எண். 14:12; உபா. 9:14; எரே. 6:22

**22** **ஆகாய் 2:23 - முத்திரை மோதிரம்**
**தியானத்திற்கு:** ஆதியாகமம் 41:40-43; எசேக்கியேல் 28:12

**23** **நீதிமொழிகள் 3:33 - கர்த்தர் நீதிமானை ஆசீர்வதிக்கிறார்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 72:7; நீதிமொழிகள் 10:6; ஏசாயா 3:10

**24** **சங்கீதம் 3:3 - கர்த்தர் நம் கேடகம்**
**தியானத்திற்கு:** உபா. 33:29; 2 சாமு. 22:3; சங். 28:7; நீதி. 30:5

**25** **ஆதியாகமம் 15:1 - தேவன் நமக்கு பலனளிக்கிறார்**
**தியானத்திற்கு:** யோபு 34:11; சங். 62:12; ஏசாயா 62:11; புலம்பல் 3:64

**26** **உபாகமம் 28:3 - சகலவற்றிலும் ஆசீர்வாதம்**
**தியானத்திற்கு:** ஆதி. 22:15-18; சங். 115:12,13; கலா. 3:8,9; எபி. 6:13,14

**27** **ஏசாயா 41:15 - கூர்மையான யந்திரம்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 45:5; மீகா 4:13

**28** **சங்கீதம் 81:16 - கர்த்தர் உங்களைத் திருப்தியாக்குவார்**
**தியானத்திற்கு:** லேவி. 25:19; ரூத் 2:1-18; நெகே. 9:21-25; மத். 5:6

**29** **ஏசாயா 65:24 - மறுஉத்தரவு கொடுக்கும் தேவன்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 91:15; 138:3; ஏசாயா 30:19; எரே. 33:3

**30** **1 பேதுரு 2:9 - தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி**
**தியானத்திற்கு:** 1 நாளா. 16:12,13; லூக்கா 18:7; 1 தெச. 1:3,4





**இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்**

இணையதளம் : www.jesuscalls.org
ஃபேஸ்புக்: Jesus Calls Tamil
யூடியூப்: JesusCalls சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்
ஃபேமிலி சேனல் மொபைல் செயலி
ஃபேமிலி சேனல்: இணையதளத்தில் www.familychannel.org

சிறுவர் பகுதி

# ஜிம் & ஜெமி

## “ரிப்போர்ட் கார்டு தந்த வியப்பு”







## கதையின் நீதி:

“வெற்றி” என்பது அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்புடன் தொடங்குகிறது. இப்போது படிப்பது, பின்னர் ஆசீர்வாதங்களைத் தருகிறது.

மனப்பாட வசனம்:

**"ஞானமே முக்கியம், ஞானத்தை சம்பாதி; என்னத்தை சம்பாதித்தாலும் புத்தியை சம்பாதித்துக்கொள்."**

(நீதிமொழிகள் 4:7)

**Karunya**
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++

ARISE AND SHINE

NAAC A++ ACCREDITED WITH THE HIGHEST GRADE

Accreditation
ACCA — B. Com and Management Programs
NBA NATIONAL BOARD of ACCREDITATION — Engineering and Management Programs
ICAR — B.Sc. (Hons.) Agriculture Program

# ADMISSIONS Open 2025

Global Ranking
THE World University Rankings 2025
1201-1500 Band

Karunya programs offered with
# WORLD INDUSTRY LEADERS

Dream placements in a secure and caring environment at **Karunya**

## KMAT'25
**(Karunya Management Aptitude Test)**
For MBA
**Scheduled on:**
**7th - 8th June 2025**
**(Online)**

## B.Tech.
- **Computer Science & Engineering**
  *in collaboration with* Google
- **Robotics & Automation**
  *with* FESTO *– Global Leader in Industrial Automation*
- **Biomedical Engineering**
  *Powered by* PHOENIX Phoenix Medical Systems (P) Ltd.
  *– Advancing healthcare through innovation.*

## M.Tech.
**Integrated Water Resources Management (IWRM)**
*Offered in association with* suez *– A global leader in water solutions.*

## MBA
**with ZOHO Integration**
*Gain real-world business skills using Zoho's leading enterprise tools*

## B.Sc. (Hons.)
**Semiconductor Technology**
*Powered by* edveon®
*– India's Chipset Innovator*

## M.Sc.
**Energy Science & Technology**
*in partnership with* AMARON

SPECIAL
JEE & Inventors Scholarship

GET UPTO 100% SCHOLARSHIP*

***Come to Karunya***

Get
**World Class Education,**
On the Job training.





"My journey at Karunya led me to a Software Engineering Internship at **Google**, which ultimately resulted in a placement offer from **Google Inc.** The strong academic support, mentorship, and encouragement I received from Karunya played a vital role in helping me navigate the challenges of the internship process. I am truly grateful."

**TARA ANN LUKOSE**
B.Tech. (CSE)
Batch: (2021-2025)
Karunya University

**Programs Offered :**

ENGINEERING | AGRICULTURE | MANAGEMENT | ARTIFICIAL INTELLIGENCE | COMMERCE
FORENSIC SCIENCE | DIGITAL FORENSICS | PHYSICAL SCIENCES | MEDIA | ONLINE MBA

**Karunya Institute of Technology and Sciences,**
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu
**Toll Free: 1800 42 54 300, 1800 88 99 888**

For more details contact:
**94425 03407**
**94425 03422**

*Conditions apply





# மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கும்
# பராமரிப்பும் கண்ணியமும்!

**பாதிக்கப்பட்ட முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், வறுமை, சமுதாயத்தில் புறக்கணிப்பு மற்றும் ஆதரவைப் பெற்றுக்கொள்வதில் குறைவு ஆகியவற்றின் காரணமாக நலிவுற்ற நிலையில் உள்ளனர். நடப்பதில் சிரமம் இருப்பவர்கள், பிறர் உதவியை சார்ந்திருந்தாலும், பலர் தனிமைப்படுத்தப்பட்ட உணர்வையுமே அடைகின்றனர்.**

அத்தகைய மக்களின் முக்கியமான தேவைகளை அறிந்து, சீஷா, பல ஆண்டுகளாக, சிறப்பு பராமரிப்பு திட்டங்கள் மூலம் அவர்களுக்கு ஆதரவு அளித்து வருகிறது. இதோ, முக்கிய அம்சங்களில் சில:







### முதியோர் பராமரிப்பு:

காருண்யா நகரிலுள்ள சீஷா முதியோர் பராமரிப்பு இல்லம் (OACH), புறக்கணிக்கப்பட்ட மூத்த குடிமக்கள் தங்குவதற்கு வசதியான பராமரிப்புகளை வழங்குகிறது. அதோடுகூட, அவர்களுக்கு மனநல ஆலோசனையை யும் வழங்கி, அவர்களுடைய கண்ணியமான ஓய்வு வாழ்க்கையை உறுதி செய்கிறது.

முதியோர் சேவை திட்டம், தரங்கம்பாடியில் வாழும் ஆதரவற்ற முதியோரின் உடனடி தேவைகளைப் பூர்த்தி செய்ய, மாதந்தோறும் அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்களை வழங்கி வருகிறது. மேலும், அவர்கள் தனிமையை உணராமல், அன்பும் பராமரிப்பும் கிடைக் கும் சூழலில் இணைந்து சந்தோஷமாக இருக்க, சந்திப்பு நேரங்கள் ஒழுங்கு செய்யப்படுகிறது.

### மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பு:

- எங்கள் வானகரம் சிறப்பு கல்வி மையத்தில், சிறப்பு தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு தனிப்பட்ட முறையில் சிகிச்சையும், ஆலோசனையும் வழங்கப்படுகின்றன. உடலியல் பயிற்சி, பேச்சுத்திறன் மேம்பாட்டு சிகிச்சை மற்றும் தினசரி செயல்திறன் பயிற்சிகள் உள்ளிட்டவையும் இதில் அடங்கும். இது, அவர்கள் வாழ்க்கை தரத்தை சிறப்படைய செய்கிறது.
- சமூக அடிப்படையிலான மறுவாழ்வு (CBR) திட்டத்தின் மூலம், வானகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு அவ்வப்போது சென்று, படுக்கையில் இருக்கும் நோயாளிகளுக்கு வீட்டிலேயே சிகிச்சையளிக்கிறோம்.
- காருண்யா நகரிலுள்ள சீஷா நல்வாழ்வு மையம், ஆரோக்கியமான வாழ்க்கையை நடத்துவதற்கு மனநலனின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மாணவர்கள் மற்றும் சமூக உறுப்பினர்களுக்கு முக்கியமான ஆலோசனை, வழிகாட்டுதல் மற்றும் போதை நீக்க சேவைகளை வழங்குகிறது.

---

### கைவிடப்பட்ட முதியவர்களின் நம்பிக்கையை மீட்டெடுத்தல்!



என் கணவர் இறந்த பிறகு, என் மகன்களின் ஆதரவு இல்லாமல் மாற்றுத்திறனாளியான என் மகளை கவனித்து வருவது போராட்டமாகவே இருந்தது. இந்த கடினமான நேரங்களில், அரசாங்கத்தின் பொது விநியோக ஆதரவுடன் (PDS), சீஷாவின் மாதாந்திர உலர் உணவுப் பொருட்கள் எங்களுக்கு நிலையான வாழ்வாதாரமாக இருக்கிறது. சீஷா ஏற்பாடு செய்யும் சந்திப்பு நேரங்கள் மிகுந்த ஆறுதலைத் தந்து நான் தனியாக இல்லை என்பதை நினைவூட்டுகின்றன! - திருமதி. பி. அஞ்சம்மாள், 68 வயது, தரங்கம்பாடி.

சீஷா, இந்த மக்களின் வாழ்க்கையைத் தொடர்ந்து மேம்படுத்தும்போது, நீங்களும் கீழே உள்ள எங்கள் முயற்சிகளில் இணைந்துகொள்ளலாம்:

- OACH-ல் முதியவர் ஒருவரை பராமரிக்க: ரூ.250/- ஒரு நாள்
- சிறப்புத் தேவைகள் உள்ள குழந்தையின் சிகிச்சைக்கு ஆதரவு வழங்க: ரூ.500/- ஒரு நாள்
- ஆதரவற்ற முதியவர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு உணவு வழங்க: ரூ.750/-

**DONATE TO SEESHA**

ALL DONATIONS ARE TAX-EXEMPTED UNDER SECTION 80G

**UPI ID : 9384015155@okbizaxis**

UPI: G Pay, PhonePe, Paytm, UPI, pay
Wallets: OLAMONEY, freecharge, MobiKwik, JioMoney

You can also donate through www.cashfree.com/payme/seesha

044 66660000
+91 9300 600 600

www.seesha.org
info@seesha.org

* When you Donate send the Details to +91 9300 600 600

SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045



Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest

# தென்காசி ஜெப கோபுரம் திறப்புவிழா








மே 5, 2025 அன்று, Dr. பால் தினகரன் மற்றும் சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன் அவர்களால், தென்காசியில் ஒரு புதிய இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம் திறக்கப்பட்டது. நம்பிக்கையையும், சுகத்தையும் தெய்வீக தொடுதலையும் தரும் இடமாக விளங்க இந்த ஜெப கோபுரம் ஜெபத்துடன் அர்ப்பணிக்கப்பட்டது. தென்காசியிலோ அல்லது அதை சுற்றியுள்ள பகுதியிலோ நீங்கள் இருப்பீர்களானால், இந்த ஜெப கோபுரத்திற்கு நேரில் வந்து, வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை அனுபவிக்க உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

முகவரி: **இயேசு அழைக்கிறார் தென்காசி ஜெப கோபுரம்,**
114-A, குற்றாலம் சாலை, SBI Colony, மேலகரம், தென்காசி - 627818.

மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள: +91 733 873 2204

தென்காசியிலுள்ள மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியை கொண்டுவருவதற்கு இந்த ஜெப கோபுரத்தை ஸ்தாபிக்க உதவிய அன்பு பங்காளர்களுக்கு எங்கள் உளமார்ந்த நன்றி.




# இயேசு அழைக்கிறார் பத்திரிகை

**இயேசு அழைக்கிறார் பத்திரிகை லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை கொண்டு வருகிறது. இப்போது நாங்கள் இயேசு அழைக்கிறார் பத்திரிகையை டிஜிட்டல் முறையில் கொண்டு வந்து, அனைத்து பங்காளர்களுக்கும் மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ்அப் மூலம் அனுப்பி வருகிறோம்.**

**அச்சு பிரதி மூலம் நீங்கள் இயேசு அழைக்கிறார் மாத இதழை பெற விரும்பினால், தயவுசெய்து இன்றே சந்தா செலுத்தி இணைந்திடுங்கள். உங்களுக்குரிய அச்சு பிரதியை தபால் மூலம் அனுப்பி வைப்போம்.**

**இன்றே சந்தா செலுத்தி உங்கள் பிரதியை பெற்றுக்கொள்ளுங்கள்**

## ஆண்டு சந்தா ரூ.500/- மட்டுமே

நீங்கள் ஊக்கத்தையும், சுகத்தையும், விசுவாசம் நிறைந்த உற்சாகத்தையும் தேடுகிறீர்களா? இயேசு அழைக்கிறார் பத்திரிகை வெறும் ஒரு சாதாரண வெளியீடு அல்ல. இது, கர்த்தரின் வாக்குத்தத்தங்களைக் கொண்டது.

**ஒவ்வொரு மாதாந்திர இதழும் உங்களுக்கு கொண்டுவருவது:**

* வாழ்க்கையை மாற்றும் சாட்சிகள் * வல்லமை நிறைந்த பிரார்த்தனைகள்
* விசுவாசத்தை வளர்க்கும் செய்திகள் * சிறுவர்கள், வாலிபர்கள் மற்றும் குடும்பத்தினர் என அனைத்து வயதினருக்கும் ஏற்ற வெளிப்பாடுகள்

7 மொழிகளில் கிடைக்கும் இந்த இதழ், உலகம் முழுவதற்கும் சென்று, கிறிஸ்துவின் அன்பால் வாழ்க்கையை ஒளிரச் செய்கிறது.

Visit: www.jesuscalls வாட்ஸ்அப்: 98409 99923

பங்காளர் சேவை எண்: 044-23456677 (காலை 8 மணி - இரவு 8 மணி)

REGISTERED NEWSPAPER RNI No.TNTAM/2003/10418




உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்

# பெதஸ்தா ஆசீர்வாத கூட்டம்

## உங்கள் அற்புதத்தின் நாள்

**13** 2025 ஜூலை

ஞாயிற்றுக்கிழமை

பிற்பகல் 2 மணி

தேவசெய்தியும், ஜெபமும்: *Dr.* பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர்



**இடம்:** *Dr.* டி.ஜி.எஸ். தினகரன் மையம் காருண்யா நகர், கோயம்புத்தூர் - 641 114.

### ஜெபத்திற்கு பதில்



சகோ. அந்தோணி முத்து குடும்பத்தினர் கோயம்புத்தூரில் வசிக்கின்றனர். தங்கள் இரண்டு மகள்களுக்கும் திருமணம் நடக்கவேண்டுமென்று நீண்ட காலமாக ஜெபித்து வந்தனர். கடந்த ஆண்டு நடைபெற்ற பெதஸ்தா ஆசீர்வாத கூட்டத்தில் விசுவாசத்தோடு பங்குபெற்று, ஆண்டவர் ஓர் அற்புதத்தை செய்யும்படி, அவர்மீது நம்பிக்கை வைத்து ஜெபித்தனர். அற்புதவிதமாக அதே ஆண்டு அவர்கள் ஜெபத்திற்கு பதில் கிடைத்தது. ஒரு மகளுக்கு ஏப்ரல் மாதமும், இன்னொரு மகளுக்கு ஜூன் மாதமும் திருமணம் நடைபெற்றது. இந்த ஆசீர்வாதம் தங்கள் ஜெபத்திற்கு கிடைத்த தெய்வீக ஆசீர்வாதமாக கருதி, உண்மையுள்ள தேவனுக்கு நன்றி காணிக்கை படைத்தனர். இவர்கள் சாட்சி ஆண்டவர் வாழ்வின் முக்கியமான காரியங்களில் அற்புதமாக கிரியை செய்கிறார் என்பதற்கு உதாரணமாக விளங்குகிறது.

**தேவன் தொடர்ந்து பெதஸ்தா ஆசீர்வாத கூட்டத்தில் வல்லமையான அற்புதங்களை செய்து வருகிறார்.**

நடைபெற இருக்கும் ஜூலை மாத பெதஸ்தா ஆசீர்வாத கூட்டத்தில் பங்குபெற்று, ஆண்டவரின் அற்புதங்களை செய்யும் வல்லமையை அனுபவிக்க உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

**செய்திகள் தெலுங்கு, கன்னடம், மலையாளம் மற்றும் ஹிந்தி மொழிகளில் மொழிபெயர்க்கப்படும்.**

கோயம்புத்தூர் - பெதஸ்தா, காருண்யா நகர் இடையே சிறப்பு பேருந்து வசதி உண்டு.

மேலும் விவரங்களுக்கு: 0422 - 2614580 / 94878 46601

குடும்பமாக வாருங்கள்; நண்பர்களையும் அழைத்து வாருங்கள்; ஆசீர்வாதம் பெறுங்கள்.

இணையதளம்: www.jesuscalls.org

இந்தக் கூட்டத்தை உங்கள் ஜெபத்தாலும், காணிக்கையாலும் தாங்குங்கள்.